Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 மார்கழி 30 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 துல்ஹஃதா 21 (14.01.2004) புதன்கிழமை இதழ்:105

இன்றைய அறிமுகம்! நாளைய நாகரிகம்!!

மகாராசி சில்க்ஸ்



- சல்வார் கிற
- இந்தியன் சாறி வகைகள்
- மற்றும் சிறுவர், சிறுமியருக்கான றெடிமேட் ஆடைகள்

அனைத்திற்கும் நாடவேண்டிய இடம்

மகாராசி சில்க்ஸ்

59, நவீன சந்தை உப்புறம், யாழ்ப்பாணம்

T.P No - 0777286247

# இந்திய - இலங்கை பாதுகாப்பு உடன்படிக்கை; கைச்சாத்திடுவதில் ஜனாதிபதி சந்திரிகா மும்முரம்!



## விசேட குழுவை டெல்கிக்கு அனுப்புகிறார்

(கொழும்பு)


**இந்திய - இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தம் குறித்த ஏற்பாடுகளைக் கவனிக்க உயர்மட்ட விசேட குழுவொன்றை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க புதுடெல்லிக்கு அனுப்பத் தீர்மானித்துள்ளார்.**

இந்தியாவுக்கும். இலங்கைக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பு மற்றும் உறவுகள் குறித்த தெளிவான கொள்கைகளைக் கொண்டிருக்கும் உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொள்வதற்கு இரு நாடுகளதும் அரசியற் தலைவர்கள் ஏற்கனவே இணங்கியிருந்தனர்.

இந்த இணக்கப்பாட்டின் அடிப்படையில் இருநாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு உடன்படிக்கையைச் செய்துகொள்வது தொடர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## விண்ணாணம் விநாசியர்



எப்படியாவது ஒப்பந்தம் செய்திடுறதில அம்மா குறியாத் தான் இருக்கிறா....!

## பிரஜாவுரிமை ஆவணங்களை ரத்துச்செய்ய ஜனாதிபதி பணிப்பு

(கொழும்பு)

இந்திய வம்சாவளியினருக்கு பிரஜாவுரிமையைப் பெற்றுக்கொடுப்பதாகக்கூறி பல்வேறு அரசியல் கட்சிகள் வழங்கியுள்ள ஆவணங்களை உடனடியாக ரத்துச்செய்யுமாறு உள்துறை அமைச்சின் செயலருக்கு ஜனாதிபதி சந்திரிகா உத்தரவிட்டுள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அஷ்ரப் கொலைக்கு ஹக்கீமே காரணமாம்!

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபகர் அஷ்ரப் கொலை செய்யப்பட்ட சம்பவத்திற்கு முக்கிய காரணமாக இருப்பவர் அரசாங்கத்திற்கு முட்டுகொடுத்துவரும் அமைச்சர் ரவூப் ஹக்கீமே என ஜே.வி.பியின் பிரசாரச் செயலர் விமல் வீரவன்ச குற்றஞ்சாட்டினார்.

நேற்று திருகோணமலையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானப் பேச்சை முன்னெடுக்குமாறு அரசாங்கத்துக்கு சுவீடன் அழுத்தம்!

### யாழ். வந்த அந்நாட்டு எம்.பி. தகவல்

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதான முயற்சியை தொடர்ந்து முன்னெடுக்குமாறு ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் சுவீடன் அரசு அழுத்தம் கொடுத்து வருகிறது என சுவீடன் நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர் இங்கர் றெனி தெரிவித்தார்

நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்த சுவீடன் நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவினர் நேற்று யாழ். செயலகத்துக்கு சென்று அரச உயர் அதிகாரிகளை சந்தித்து கலந்துரையாடினர்.

பின்னர் செய்தியாளர்களிடம் உரையாற்றும் போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

இதன்போது அவர்கள் மேலும் தெரிவித்ததாவது

யுத்த நடவடிக்கையின் பின்னர் குடாநாட்டில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் தொடர்பாக ஆராய்ந்தோம். போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு புனர்வாழ்வு அளிப்பது தொடர்பான திட்டங்கள் குறித்தும் விரிவாக ஆராய்ந்தோம். யுத்த நடவடிக்கையின் போது விதவையாக்கப்பட்ட பெண்களுக்கு தொழில்வாய்ப்புக்களை (12 ஆம் பக்கம் பார்க்க)



## மக்களுக்கு இடையூறு விளைவித்த இளைஞர் குழு விளக்க மறியலில்!

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகரப் பகுதியில் பொதுமக்கள், பாடசாலை மாணவிகள் மற்றும் யுவதிகளை இம்சைப்படுத்திவந்ததாகத் தெரிவிக்கப்படும் இளைஞர் கும்பல் ஒன்று பருத்தித்துறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்தின் பீடாதிபதி ஒருவரது மகன் உட்பட எண்மர் கொண்ட கும்பலொன்றே நேற்றுமுன்தினமிரவு கைது செய்யப்பட்டது.

பருத்தித்துறை நகரப்பகுதியில் பொது மக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தேசப்பற்று முன்னணி நடத்திய பேரணியில் திருமலையில் 10 ஆயிரம் பேர் பங்கேற்பு!



நாட்டைப் பிரிக்கமுடியாது. விரும்பினால் தமிழர்களும், முஸ்லிம்களும் சிங்கள ஆட்சியின் கீழ் வாழட்டும் என்ற கோஷங்களை முன்வைத்து, தேசப்பற்று தேசிய முன்னணி திருமலையில் கூட்டம் ஒன்றை நடத்தியது.

இந்தக் கூட்டம் நேற்று திருகோணமலை நகரத்தில் அமைந்துள்ள பொதுச் சந்தையின் முன்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான டிலான் பெரேரா, அர்ஜுன ரணதுங்க, சந்திரசேகரன், விமல் வீரவன்ச,

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திரக்கட்சி ஜே.வி.பி. கூட்டு பொதுத் தேர்தலுக்கு மட்டுமே!

### இருகட்சிகளும் இணக்கம்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையில கூட்டணி அமைப்பது தொடர்பாக, நேற்றுமுந்தினம் நடத்தப்பட்ட பேச்சுக்களின் போது இறுதி முடிவு எடுக்கப்பட்டது.

இரண்டு கட்சிகளுக்கும் இடையிலான கூட்டணி தொடர்பான உடன்படிக்கை இம்மாத இறுதிக்குள் கைச்சாத்திடப்படவுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சார்பில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், கட்சியின் பொதுச் செயலர் மைத்திரிபால சிறிசேனவும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

ஜே.வி.பியின் சார்பில் கட்சியின் பொதுச் செயலர் ரில்வின் சில்வா, மற்றும் பிரசாரச் செயலர் விமல் வீரவன்ச ஆகியோர் கலந்து

(12 ஆம் பக்கம் பார்க்க)

## காணாமற்போனோர் பாதுகாவலர்களை ராணுவத் தளபதி சந்திரபால சந்திப்பார்!

வடபகுதியில் கைதுசெய்யப்பட்டு காணாமற்போனோர் சங்கப் பிரதிநிதிகளையும், அன்னையர் முன்னணியினரையும் யாழ். மாவட்ட இராணுவத் தளபதி சுசில் சந்திரபால சந்திக்கவுள்ளார்.

இந்தச் சந்திப்பு எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆஸ்பத்திரி வீதியிலுள்ள இராணுவமுகாமில் அமைந்துள்ள சந்திப்பு மண்டபத்தில் நடைபெறும்.

அன்னையர் முன்னணியின் சங்க உறுப்பினர்களை அன்றைய தினம் நண்பகல் 12 மணிக்கு அலுவலகத்தில் ஒன்றுகூடுமாறு அன்னையர் முன்னணியின் தலைவி செ.கனகாம்பிகை கேட்டுள்ளார்.

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....



ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297

071-2348888, 071-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291

எக்ஸ்போஎயார்

EXPOAIR

வான் வெளியில் உங்கள் நண்பன்...

your friend in the skies...

email :- jaffna@expoavi.com, reservations@expoavi.com

(சி-2009)

# அன்னையே அகல் விளக்கே!

# ஆண்டு நிறைவு அஞ்சலிகள்!

## அமரர் V.M. கணபதிப்பிள்ளை பராசக்தி

அன்னையின் மடியில்

13 . 05 . 1928



ஆண்டவன் அடியில்

14 . 01 . 2003

### திதி வைகுந்த ஏகாதசி

வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்தீர்
ஏழையரைக் -
கையணைத்துக் காத்தீர் - கடமைசெய்தீர்
தையலர்கள் -
தலைவியென நின்றீர் - தகைமை தந்தீர்
அம்மா - இன்று...
பையெனவே நடந்தீர் - பதறுகிறோம்!
ஆண்டுகள் பலநூறு அகன்றாலும்
அம்மா உம் நாமம் மங்காது!
ஈண்டுங்கள் பெயரை நாம் பெருமை செய்வோம்
பேசரிய் தலைவன் தாள் அமைதி கொள்க!

**அன்னையின் ஆத்ம சாந்திக்கு**
**எம் அஞ்சலிகள்**

டச்சுவீதி,
சாவகச்சேரி.

V.M.K. குடும்பத்தினர்

(சி-2132)

# வடக்கு - கிழக்கில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்தும் சூழல் இல்லை!

## அரச அதிபர்கள் தேர்தல் ஆணையாளருக்குத் தெரிவிப்பு

(கொழும்பு)

**வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சிமன்ற தேர்தல்களை நடத்துவதற்கான சூழ்நிலை இன்னமும் ஏற்படவில்லை என்று வடக்கு - கிழக்கு மாகாண மாவட்ட அரசாங்க அதிபர்கள் - தேர்தல் ஆணையாளரிடம் எடுத்துக் கூறியுள்ளனர்.**

**வடக்கு - கிழக்கில் கடந்த வருடம் உள்ளூராட்சித் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டபோது எத்தகைய சூழ்நிலை இருந்ததோ, அத்தகைய நிலையே தற்போதும் காணப்படுகின்றது என்றும் அரசாங்க அதிபர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.**

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க நேற்றுமுன்தினம் வடக்கு - கிழக்கு அரசாங்க அதிபர்களை கொழும்புக்கு அழைத்து வடக்கு - கிழக்கில் தற்போது உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்தலாமா? அதற்கான சூழ்நிலை அங்குள்ளதா? என ஆராய்ந்தார்.

அரசாங்க அதிபர்களுடனான தேர்தல் ஆணையாளரின் சந்திப்பு நேற்றுமுன்தினம் காலை தேர்தல் திணைக்களத்தில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம், அம்பாறை, கிளிநொச்சி, வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர்கள் கலந்துகொண்டனர்.

மாநாட்டில் கலந்துகொண்ட அரசாங்க அதிபர்களில் பலர் தமது மாவட்டங்களில் உள்ளூராட்சி தேர்தலை நடத்துவதற்கான சூழ்நிலை இல்லை என்றும் முன்னர் உள்ளூராட்சி தேர்தல் ஒத்திவைக்கப்பட்டிருந்தபோது இருந்தநிலையே தற்போதும் காணப்படுவதாகவும் எடுத்துக்கூறியுள்ளனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் விடுதலைப் புலிகளின் பூரணகட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் தேர்தலை நடத்தவேண்டுமாயின், அதற்குப் புலிகளின் இணக்கமும் அவசியம் என முல்லைத்தீவு, கிளிநொச்சி அரசாங்க அதிபர்கள் - தேர்தல் ஆணையாளரிடம் கூறியுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்திலும் பாதுகாப்பு படையினரின் கட்டுப்பாடுகள் இல்லாதபகுதிகள் இருப்பதாக மட்டக்களப்பு அரச அதிபர் சுட்டிக்காட்டினார்.

யாழ்.மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இடம்பெயர்ந்த மக்கள் தொடர்ந்தும் தமது சொந்த இடங்களில் குடியேறமுடியாமல் இருக்கின்றனர். அவர்கள் இடம்பெயர்ந்த இடங்களிலும் தம்மை வாக்காளர்களாக இன்னும் பதிவு செய்துகொள்ளவில்லை என யாழ். அரச அதிபர் எடுத்துக்கூறினார்.

நிர்வாகரீதியில் தேர்தலை நடத்தக்கூடிய போதிய அரச ஊழியர்கள் உள்ளனர். ஆனால், ஒரு சில மாவட்டங்களில் வாகனம் உட்பட ஏனைய வசதிகள் இல்லையெனவும் அரச அதிபர்கள் சுட்டிக்காட்டினார்கள்.

அரச அதிபர்கள் கூறியவற்றை விளக்கமாக கேட்டுக்கொண்ட தேர்தல் ஆணையாளர் - உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை நடத்த பாதுகாப்பு சூழ்நிலைகள் உகந்ததாக உள்ளதா? தேர்தலுக்குரிய பாதுகாப்பை வழங்கமுடியுமா? என்பது குறித்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் விபரங்கள் கோரியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

ஒத்திவைக்கப்பட்ட வடக்கு - கிழக்கு உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் ஒத்திவைப்பு திகதி இந்த மாதம் 25 ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

ஆகையால், உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படுமா? இல்லையா? என்பதை தேர்தல் ஆணையாளர் இந்த மாத முடிவில் தீர்மானிப்பார்.

# தேர்தலுக்கு தயாராக இருக்குமாறு பொ.ஐ.முவுக்கு ஜனாதிபதி உத்தரவு!

பொதுஜன ஐக்கிய முன்னணியின் உறுப்பினர்களை தேர்தலைச் சந்திக்க தயாராக இருக்குமாறு ஜனாதிபதி தெரிவித்தார்.வடமத்திய மாகாணம், மற்றும் சப்பிரகமுவா மாகாணங்களைச் சேர்ந்த பொதுஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள, நகரசபை மற்றும் பிரதேச சபை உறுப்பினர்களைச் சந்தித்து உரையாடும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளதாக செய்திகள் கூறுகின்றன.

எந்தத் தேர்தலை முதலில் நடாத்துவது என இன்னமும் தீர்மானம் மேற்கொள்ளப்படாத போதிலும், தேர்தலுக்கு முகம் கொடுக்கக் கூடியதாக தத்தமது பிரதேசங்களை தயார்ப்படுத்துமாறு ஜனாதிபதி இந்தச் சந்திப்பின்போது, கட்சிப் பிரதிநிதிகளைக் கோரியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தேர்தலுக்கு முன்னர் தமது பிரதேசங்களில் மேற்கொண்டுவந்த அபிவிருத்தி பணிகளை முடிவுசெய்வதற்கு ஏற்பாடு செய்யுமாறும் ஜனாதிபதி கட்சிப் பிரதிநிதிகளிடம் தெரிவித்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

# ஆசிய பாதுகாப்பு சம்மேளனக் கூட்டத்தில் ரிரோன் பெர்னாண்டோ கலந்துகொள்வார்!

புதுடில்லியில் இந்த மாதம் 27 ஆம் திகதி நடைபெற இருக்கும் 6 ஆவது ஆசிய பாதுகாப்பு சம்மேளனக் கூட்டத்தில் வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்னாண்டோ கலந்துகொள்ளவுள்ளார்.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு வெளிவிவகார அமைச்சருக்கு இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் அழைப்பு விடுத்துள்ளார்.

"பலதரப்பு உறவுகள் ஐக்கிய நாடுகள் எதிர்நோக்கும் சவால்கள்" என்ற தொனிப் பொருளில் இந்தக் கூட்டம் நடைபெறவிருக்கிறது.

இந்தியா, பிரிட்டன் ஆகியவற்றின் வெளிவிவகார அமைச்சர்கள், ஐக்கியநாடுகள் சபையின் பிரதிச் செயலாளர் நாயகம், ரஷ்யாவின் பிரதி வெளிவிவகார அமைச்சர், அமெரிக்காவின் முன்னாள் இராஜாங்கச் செயலர், ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதி, மோதல் தவிர்ப்பிற்கான ஜப்பான் நிலைத் தலைவர் ஆகியோரும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளவுள்ளனர்.

# பொலிஸாரின் சீருடை மாற்றம்

(கொழும்பு)

பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான சீருடைகளை மாற்றுவதற்கான யோசனையொன்றை பொலிஸ்மா அதிபர் அரசாங்கத்திடம் முன் வைத்துள்ளார்.

தற்போதுள்ள பொலிஸார் அணியும் சீருடை காலம் கடந்துள்ளது. அத்துடன், இந்தச் சீருடை வெளிநாடுகளிலும் மாற்றப்பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் இந்திர டி சில்வாவால் அரசுக்கு சமர்ப்பித்த யோசனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கைச் சிறையிலுள்ள தமிழக மீனவர்களை மீட்காவிடின் வரும் 20 ஆம் திகதி ரயில் மறியல்!

## தமிழக - புதுவை மீனவர் கூட்டமைப்பு அறிவிப்பு

(இராமேஷ்வரம்)

எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் இலங்கைச் சிறையில் வாடும் இராமேஸ்வர மீனவர்களை மீட்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்காவிட்டால் பாம்பன் பாலத்தில் ரயில் மறியல் போராட்டம் செய்வோம் என்று தமிழ்நாடு - புதுவை மீனவர்கள் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

தமிழ்நாடு - புதுவை மீனவர்கள் *கூட்டமைப்பின் .பொதுச்செயலர்* என்.கே.போஸ் சென்னையில் நிருபர்களுக்கு பேட்டி அளிக்கும்போதே இவ்வாறு கூறினார்.

இராமேஸ்வர மீனவர்கள் கடலுக்குள் சென்று மீன்பிடிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. 100 இற்கும மேற்பட்ட தமிழக மீனவர்கள் இலங்கைச் சிறையில் வாடுகிறார்கள். 68 விசைப்படகுகளும், 11 நாட்டுப் படகுகளும் இலங்கை அரசின் கட்டுப்பாட்டில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இலங்கை சிறையிலுள்ளவர்களை மீட்கவோ, படகுகளைத் தமிழகம் கொண்டுவரவோ மத்திய அரசு இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

தமிழ் நாட்டில் இருந்து தி.மு.க, *ம.தி.மு.கவைச் சேர்ந்த 8 பேர் அர*சில் அமைச்சர்களாக இருந்தார்கள். ஆனால், அவர்கள் தமிழக மீனவர்களை மீட்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆனால், வடநாட்டைச் சேர்ந்த மத்திய அமைசச்ர்கள் பாகிஸ்தான் சிறையில் வாடிய குஜராத், ஒரிசா மீனவர்களை அந்நாட்டு அரசுடன் பேசி விடுவிக்க உதவினார்கள். ஆனால், தமிழகத்தைச் சேர்ந்த மத்திய அமைச்சர்கள் எந்த உதவியும் செய்யவில்லை. இந்த விவகாரத்தில் நாங்கள் தமிழக அரசைக் குறை சொல்லவில்லை, காரணம் அவர்கள் எதுவும் செய்யமுடியாது.

மத்திய அரசுதான் முயற்சிசெய்து மீனவர்களை விடுதலை செய்யவேண்டும். எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு *முன்பாக இலங்கை சிறையிலுள்ள* தமிழக மீனவர்கள் விடுவிக்கப்படவில்லை என்றால், 20 ஆம் திகதி மத்திய அரசைக் கண்டித்து பாம்பன் பாலத்தில் ரயில் மறியல் நடத்தத் திட்டமிட்டிருக்கிறோம் எனத் தமிழக - புதுவை மீனவர்கள் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

# அயர்லாந்து சமாதான பிரதிநிதிகள் புத்தளம் பகுதிக்கு விஜயம்!

(கொழும்பு)

சமூக அபிவிருத்திக்கான ஆய்வுச் செயலகத்தின் அழைப்பின் பேரில் புத்தளம், நுரைச்சோலை போன்ற இடங்களுக்கு விஜயம் செய்த அயர்லாந்து சமாதானப் பிரதிநிதிகள் - மக்களின் நிலைமைகள் குறித்து ஆராய்ந்துள்ளதுடன், புத்தளம் நகரசபா மண்டபத்தில் அந்த பிரதேசத்தின் புத்திஜீவிகள் சிலரையும் சந்தித்து உரையாடியுள்ளனர்.

இந்தச் சந்திப்பில் இடம்பெயர்ந்த முஸ்லிம்களின் மீள்குடியேற்றம், எதிர்கால செயற்திட்டங்கள் தொடர்பாகவும், ஆராயப்பட்டதாக அறிவிக்*கப்படுகிறது.*

அரசியல் கலப்படமற்ற மக்கள் நடவடிக்கைக் குழுவொன்று உருவாக்கப்பட்டு அதன்மூலமே வட பகுதி முஸ்லிம்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும் எனவும் இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அயர்லாந்து சமாதானப்பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளின் அரசியல் பிரதிநிதிகளையும் சந்தித்து உரையாட இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## மோட்டார் சைக்கிள் திருட்டு

(வண்ணை)

வீட்டின் முற்றத்தில் நிறுத்தப்பட்டிருந்த 'ஹீரோ கொண்டா' இன மோட்டார் சைக்கிள் ஒன்று திருடப்பட்ட சம்பவம் கடந்த ஞாயிறு மாலை கொக்குவில் ஸ்ரேசனடிப் பகுதியில் இடம்பெற்றள்ளது.

*நண்பகல் வேளையில் வீட்டின்* உரிமையாளர் உள்ளே இருந்த போதே, இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது குறித்து கொடிகாமம் பொலிஸிலும், பளை தமிழீழ காவற்துறை பணிமனையிலும் அறிவிக்கப்பட்டுள்ளதாக மோட்டார் சைக்கிளை பறிகொடுத்தவர் தெரிவித்தார். (111)

## சமாதான முயற்சியில் தடங்கல்

# தீர்வு காண்பதற்காக வெளிநாட்டு இராஜதந்திரிகள் இலங்கை வரவுள்ளனர்

(கொழும்பு)

இலங்கையில் தற்போது தோன்றியிருக்கும் அரசியல் நெருக்கடி மற்றும் சமாதான முயற்சிகளில் ஏற்பட்டுள்ள தடங்கல்கள் ஆகியவற்றுக்கு தீர்வுகாணும் நோக்குடன், ஏராளமான வெளிநாட்டு இராஜதந்திரிகள் இலங்கைக்கு வரவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் அமெரிக்க செனற்றர்களைக் கொண்ட குழு ஒன்று நாளை இலங்கை வரவுள்ளது.

இதுதவிர, ஜேர்மன் வெளிவிவகார அமைச்சர் நாளை மறுதினம் வரை இலங்கையில் தங்கியிருப்பாரெனத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், ஜப்பானின் விசேட தூதுவர் யசுஷி அகாஷி எதிர்வரும் 19 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாகவும், தற்போது நோர்வேயில் தங்கியிருக்கும் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் எதிர்வரும் வாரங்களில் விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# கட்டடப் பொருட்கள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

மூத்த தளபதி கேணல் கிட்டு ஞாபகார்த்தமாக யாழ்.நல்லூர் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவை, பொதுஜன ஒன்றியம், யாழ. ப.நோ. கூ.சங்க அனுசரணையுடன் சனசமூக நிலையங்களின் புனரமைப்புக்கு சிமெந்து மற்றும் கட்டடப் பொருட்களை வழங்கவுள்ளது.

கொழும்புத்துறை ச.ச.நிலையம், கலைவாணி ச.ச.நிலையம், நல்லூர் முருகன் ச.ச.நிலையம், வளர்பிறை ச.ச நிலையம் ஆகியவற்றுக்கே ஒரு தொகுதி கட்டடப்பொருட்கள் வழங்கப்படவுள்ளதாக ஏற்பாட்டாளர் தெரிவித்தார். (111)

# இணக்கப்பாடு ஏற்பட்ட பின்னரே நெருக்கடிக்கு தீர்வு எட்டமுடியும்

## பௌத்த பீடாதிபதிகள் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதியும், பிரதமரும் தமது தனிப்பட்ட நலன்களில் அக்கறை செலுத்தாது, நாட்டு நலன்கருதி பொது இணக்கப்பாடொன்றுக்கு வரவேண்டும். அதன்மூலம் நாட்டில் தற்போது எழுந்துள்ள அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காணமுடியுமென மல்வத்த, அஸ்கிரிய பௌத்த பீடாதிபதிகள் தெரிவித்துள்ளனர்.

அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் பீடாதிபதிகள் இருவரையும் கடந்த சனிக்கிழமையன்று தனித்தனியாகச் சந்தித்துக் கலந்துரையாடினார். அதன்போது, இருதேரர்களும் அமைச்சரிடம் இந்தக் கருத்தைத் தெரிவித்தனர்.

மல்வத்த பௌத்த பீடாதிபதி ரம்புக்கவெல ஸ்ரீ விபசி தேரரை அமைச்சர் சந்தித்து கலந்துரையாடியபோது, தற்போது எழுந்துள்ள அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கு பொதுத்தேர்தல் தீர்வல்ல, பொதுத் தேர்தல் ஒன்று ஏற்படுமாக இருந்தால் மிகுந்த செலவு ஏற்படும். அதனை தவிர்க்கக்கூடிய நிலையில் நாட்டின் பொருளாதாரம் தற்போது இல்லை.

ஒருசிலர் பொதுத்தேர்தலின் மூலமே தற்போதுள்ள நெருக்கடிக்கு தீர்வு காணமுடியுமென நினைக்கிறார்கள். ஆனால், பிரதமரும் ஜனாதிபதியும் கட்சி நலன்களை விடுத்து ஓர் இணக்கப்பட்டுக்கு வரும்போதே, நாட்டை பொருளாதார மற்றும் சகல துறைகளிலும் கட்டியெழுப்பமுடியும்.

ஜனாதிபதியின் சில நடவடிக்கையினால் பிரதமர் முன்னெடுத்துச்சென்ற சமாதான முயற்சிகள் தடைப்பட்டுள்ளன. எனினும் ஜனாதிபதியும் அரசியல் அமைப்பின் படியே செயற்பட்டுள்ளார். எனவே, நாட்டில் ஒரு நெருக்கடியை தோற்றுவிப்பதற்கு காரணமாக அமைந்துள்ள அரசியல் யாப்பை மாற்றுவதன் மூலமாகவே எதிர்காலத்தில் எழும் சிக்கல்களை தவிர்த்து கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, அமைச்சரோடு கலந்துரையாடிய அஸ்கிரிய பீடாதிபதி உடுகம புத்த ரகித தேரரும் இந்தக்கருத்தையே வலியுறுத்தியுள்ளார். ஜனாதிபதியும், பிரதமரும் தமது கட்சி நலன்களை முன்னிலைப்படுத்தியே இன்று செயற்படுகிறார்கள். அதனாலே, பல சிக்கல்கள் எழுந்துள்ளது.

பொது இணக்கப்பா டொன்றை அடைவதே சிக்கல்களை தீர்ப்பதற்கான ஒரேவழி எனவும் தெரிவித்தார். (01)

### முத்தரப்பு ஒருநாள் சர்வதேச போட்டியில்

# இந்திய - சிம்பாப்வே அணிகள் இன்று ஹோபர்ட்டில் மோதும்!

இந்திய, அவுஸ்ரேலியா, சிம்பாப்வே ஆகிய அணிகள் பங்கேற்கும் ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி - அவுஸ்ரேலியாவில் நடைபெற்றுவருகிறது. இதில் ஒவ்வொரு அணியும் மற்ற அணியுடன் தலா 4 முறை மோதவேண்டும். புள்ளிகள் அடிப்படையில் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகள் இறுதிப் போட்டிக்குத் தகுதிபெறும்.

தொடக்க ஆட்டத்தில் அவுஸ்ரேலியா 18 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்தியாவையும், 2 ஆவது ஆட்டத்தில் 99 ஓட்டங்கள் வித்தியாசத்தில சிம்பாப்வேயையும் தோற்கடித்தது.

3 நாடுகள் போட்டியின் 3 ஆவது லீக் ஆட்டம் ஹோபர்ட்டில் இன்று நடக்கிறது. இதில் இந்திய - சிம்பாப்வே அணிகள் மோதுகின்றன.

அவுஸ்ரேலியாவுக்கு எதிரான ஆட்டத்தில் இந்தியா வெற்றி பெற்றிருக்கவேண்டியது. கடைசி 6 விக்கெட்டுகள் 13 ஓட்டங்களில் வீழ்ந்ததால் வெற்றிபெற வேண்டிய ஆட்டத்தில் தோல்வியடைந்தது. இதை சரிக்கட்டும் வகையில் இந்திய அணி இன்று ஆடவேண்டிய நிலையுள்ளது.

அவுஸ்ரேலியாவுக்கு எதிரான ஆட்டத்தில் சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த கங்கூலி ரன் அவுட் ஆனதற்கு சஞ்சய் பங்கர்தான் காரணம். அவரது துடுப்பாட்டமும், பந்துவீச்சும் எடுபடவில்லை. இதனால், இன்றைய போட்டிக்கான இந்திய அணியிலிருந்து அவர் நீக்கப்படலாம். அவருக்குப் பதிலாக தமிழக வீரர் ஹேமங் பதானிக்கு வாய்ப்பு வழங்கப்படும் எனத் தெரிகிறது.

பந்துவீச்சைப் பொறுத்தவரையில் - அகர்கர், கும்ளே ஆகியோர் மட்டுமே சிறப்பாகப் பந்துவீசி வருகிறார்கள். வேகப்பந்துவீச்சில் இன்று மாற்றம் செய்யப்படலாம். அசிஸ் நெஹ்ராவுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டு, பதான் அல்லது பாலாஜி நீக்கப்படலாம்.

டெண்டுல்கர் துடுப்பாட்டத்தில் நல்ல நிலைக்கு திரும்பியிருப்பது இந்திய அணியின் துடுப்பாட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் இருக்கும்.

இந்திய அணியுடன் துடுப்பாட்டத்தில் ஒப்பிடுகையில், சிம்பாப்வே பலவீனமாதே. அந்த அணி எந்த வித எதிர்ப்பையும் தெரிவிக்காமலே அவுஸ்ரேலியாவிடம் தோற்றது. சிம்பாப்வே அணியில் அனுபவம் வாய்ந்த வீரர்கள் குறைவே. ஸ்ரீக், கிராண்ட் பிளவர், பிளிங்னட், கேர்லிசி ஆகிய அனுபவம்வாய்ந்த வீரர்கள் அந்த அணியில் உள்ளனர்.

இந்தியா - சிம்பாப்வே இடையேயான போட்டி பகல் ஆட்டமாக நடக்கிறது. இப்போட்டி இன்று அதிகாலை 5 மணிக்கு ஆரம்பமாகும்.

### உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட லீக் நடாத்தும் உதைபந்தாட்டப் போட்டியில் - இன்று மாலை உரும்பிராய் இந்துக் கல்லூரியில் இரண்டு ஆட்டங்கள் நடைபெறவுள்ளன.

முதலாவது ஆட்டம் - மாலை 3.30 மணிக்கு - நாவாந்துறை சென்மேரிஸ் எதிர் பாசையூர் சென். அன்ரனிஸ் கழகங்களும், மாலை 5 மணிக்கு நாவாந்துறை சென்.நீக்கிலசை எதிர்த்து ஊரெழு றோயல் அணியும் மோதவுள்ளன.

### பாகிஸ்தான் - நியூஸிலாந்து இடையே நான்காவது போட்டி இன்று நடைபெறும்

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி நியூஸிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து விளையாடிவருகிறது. இரு அணிகளுக்கும் இடையேயான டெஸ்ட் தொடரை பாகிஸ்தான் 1:0 என்ற கணக்கில் கைப்பற்றியது. ஐந்து ஒருநாள் தொடரில் முதல் மற்றும் மூன்றாவது போட்டியில் நியூஸிலாந்தும், இரண்டாவது போட்டியில் பாகிஸ்தானும் வெற்றிபெற்றன. நியூஸிலாந்து 2:1 என்ற கணக்கில் முன்னணியில் உள்ளது.

பாகிஸ்தான் - நியூஸிலாந்து அணிகள் இடையேயான 4 ஆவது ஒரு நாள் போட்டி இன்று நடக்கிறது. இதில நியூஸிலாந்து வெற்றிபெற்றால் தொடரைக் கைப்பற்றும். இதனால், பாகிஸ்தான் வீரர்கள் தங்களது முழுத் திறமையை வெளிப்படுத்தி வெற்றிக்காகப் போராட வேண்டிய நிலையிலுள்ளனர்.

## விளையாட்டு

# பிரதேச செயலக ரீதியான விளையாட்டுப் போட்டிகள்

இந்த வருடம் நடைபெறவுள்ள பிரதேச செயலக ரீதியான விளையாட்டுப் போட்டிக்கான அணித் தெரிவுகள் இடம்பெறவுள்ளன. முதற்கட்டமாக கோப்பாய் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கழகங்களுக்கான அணித் தெரிவுகள் நாளை மறுதினம் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிகளில் பங்குபற்றுவதற்காக விண்ணப்பித்த கழகங்கள், விண்ணப்பிக்கவிருக்கும் கழகங்கள் - அன்றைய தினம் பிரதேச செயலகத்திற்க்கு நேரில் சமுகமளிக்கும்படி, யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி தெரிவித்தார். (ச)

### வட-கிழக்கு மாகாணமட்ட போட்டிகளுக்கான

# யாழ். மாவட்ட அணி வீரர்கள் 19 ஆம் திகதி தெரிவுசெய்யப்படுவர்

வடக்கு - கிழக்கு மாகாணமட்ட விளையாட்டுப் போட்டிகளில் - கூடைப்பந்தாட்டம், பட்மின்ரன், மேசைப்பந்து ஆகிய போட்டிகளில் பங்குபற்றும் யாழ்.மாவட்ட அணி வீரர்களைத் தெரிவுசெய்வற்கான அணித்தெரிவு, எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

ஆண், பெண் இருபாலாரும் வயதுக் கட்டுப்பாடின்றி இந்தப் போட்டிகளில் பங்குபற்றமுடியும். இதில் பங்குபெற்ற விரும்பும் வீரர்கள், கழகங்கள் தமது பிரதேச விளையாட்டுத்துறை உத்தியோகத்தர் ஊடாக, மாவட்ட விளையாட்டுத்துறை பொறுப்பதிகாரியை தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (ச)

# யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான மேசைப்பந்தாட்டப் போட்டிகள் ஆரம்பம்!

(திருநெல்வேலி)

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான மேசைப்பந்தாட்டப் போட்டிகள் நேற்றுக் காலை 9.30 மணிக்கு சுண்டிக்குளி வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் ஆரம்பமானது. இந்தப் போட்டியில் பெண்களுக்கான போட்டி நேற்று இடம்பெற்றது. இதில் வேம்படி மகளிர் கல்லூரி சம்பியனானது.

போட்டிகளின் விபரம் வருமாறு, வேம்படி மகளிர் உயர் கல்லூரி அணியும், திருக்குடும்ப கன்னியர் மட பாடசாலை அணியும் இறுதிப் போட்டியில் விளையாடின. 3:0 என்ற அடிப்படையில், வேம்படி மகளிர் கல்லூரி அணி சம்பியனாகத் தெரிவாகியது. இரண்டாம் இடத்தைத் திருக்குடும்ப கன்னியர்மட அணி பெற்றது.

மூன்றாம் இடத்துக்கான போட்டியில் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி பெண்கள் அணியும், தெல்லிப்பளை யூனியன் கல்லூரி பெண்கள் அணியும் மோதின. 3:1 என்ற வெற்றி அடிப்படையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி பெண்கள் அணி மூன்றாம் இடத்தினைப் பெற்றது. வேம்படி மகளிர் கல்லூரி அணியில் எஸ்.கஜனி மிகதிறமையாக விளையாடி வெற்றிக்கு வழிவகுத்தார். (205)

# தி.மு.க கூட்டணியில் ம.தி.மு.கவுக்கு 5 இடங்கள்

### சிவகாசியில் வைகோ போட்டியிடுவார்



(சென்னை)

திராவிட முன்னேற்றக்கழகத்துடன் கூட்டணி அமைத்து - எதிர்வரும நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடவுள்ள மறுமலர்ச்சி திராவிட முன்னேறறக்கழகத்துக்கு 5 இடங்கள் ஒதுக்கப்படும் எனக் கூறப்படுகின்றது.

தி.மு.க கூட்டணியில், ம.தி.மு.கவுக்கு எத்தனை இடங்களை ஒதுக்குவது என்பது குறித்த தொகுதிப் பங்கீட்டுப் பேச்சுக்கள் விரைவில் இரு கட்சிகளினதும் பிரமுகர்களுக்கிடையில் இடம்பெறவுள்ளது.

ம.தி.மு.க.வுக்கு ஐந்து இடங்களில் போட்டியிட இடங்கள் ஒதுக்கப்படும் என்றும், ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ மீண்டும் சிவகாசித் தொகுதியிலேயே போட்டியிடுவார் என்றும் ம.தி.மு.க வட்டாரங்கள் தெரிவித்தன.

திண்டிவனம், பழனி, திருச்செங்கோடு, பொள்ளாச்சி, சிவகாசி ஆகிய தொகுதிகளிலேயே கடந்த தேர்தலில் ம.தி.மு.க போட்டியிட்டு பழனியைத்தவிர ஏனைய நான்கு தொகுதிகளிலும் வெற்றிபெற்றிருக்கிறது.

இந்த 5 தொகுதிகளும் மீண்டும் ம.தி.மு.க.வுக்கு கிடைக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடுவதற்காக, ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைகோ சிறையிலிருந்து பிணையில் செல்லவுள்ளார். இன்னும் சில நாட்களில் இவர் நீதிமன்றத்தில் பிணைமனு தாக்கல் செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தமிழர்களின் நலன்களைக் காக்க அ.தி.மு.கவை தோற்கடிக்கவேண்டும்

### தி.மு.க கூட்டணியில் இணைந்தபின் ராமதாஸ் தெரிவிப்பு

அ.தி.மு.கவை தோற்கடிக்கவே தி.மு.க கூட்டணியில் இணைவதாக பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுனர் டொக்டர் ராமதாஸ் கூறினார்.


தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருந்து விலக முடிவெடுத்த பின், நிருபர்களிடம் ராமதாஸ் கூறியதாவது -

தமிழகம் இன்று ஒரு சரித்திரத் திருப்புமுனையைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது. தமிழன் மற்றும் தமிழகத்தின் சுயமரியாதையை பின் தள்ள முயற்சி நடக்கிறது. தமிழ் மற்றும் தமிழர்கள் என்ற உணர்வையே மழுங்கடிக்கவும், திராவிட சிந்தனைகளை கூர் மழுங்கச் செய்யவும் முயற்சி நடக்கிறது.

இது தமிழர்களின் தன்மானத்துக்கு விடப்பட்ட சவாலாகவே நான் நினைக்கின்றேன். தமிழர்களின் நலன் காக்க, தமிழ்நாட்டின் மானம் காக்க அ.தி.மு.கவைத் தேற்கடிக்கவேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

அதற்கு ஏதுவாக அ.தி.மு.க.வுக்கு எதிரான வாக்குகள் பிளவுபடக் கூடாது என்பதற்காக, தி.மு.க கூட்டணியில் சேர முடிவெடுத்திருக்கிறோம்.

ஆனால், பழையன எல்லாவற்றையும் துரதிஷ்டவசமாக பா.ஜ.க. மறந்துவிட்டு அ.தி.மு.க.வுடனான உறவைப் புதுப்பிக்க முயல்கிறது. தமிழக மக்களின் விருப்பத்துக்கும், எதிர்பார்ப்புக்கும் எதிரான முடிவை பா.ஜ.க. எடுத்துள்ளது. அ.தி.மு.க.வுடன் கூட்டணி சேரும் பா.ஜ.கவின் முடிவு எங்களுக்கு ஏற்புடையதல்ல. இதனால், மத்திய அரசுக் கூட்டணியிலிருந்து விலகுகின்றோம் எனத் தெரிவித்தார்.



# காங்கிரஸ் தலைமையிலான கூட்டணியில் லோக் ஜனசக்தி கட்சியும் இணையும்

### ராம்விலாஸ் பாஸ்வான் தெரிவிப்பு

(சென்னை)

தி.மு.க தலைவர் கருணாநிதியை லோக் ஜனசக்திக் கட்சித்தலைவர் ராம்விலாஸ் பாஸ்வான் சந்தித்துப் பேசினார்.

கருணாநிதியின் இல்லத்தில் நடந்த இந்தச் சந்திப்பு 40 நிமிடங்கள் நீடித்தது. சந்திப்பிற்குப் பின் செய்தியாளர்களிடம் பேசிய பாஸ்வான் -

காங்கிரஸ் தலைமையில் அமையவுள்ள மதச்சார்பற்ற கூட்டணியில் லோக் ஜனசக்தி கட்சியும் சேரும். இது தொடர்பாக விரைவில் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியுடன் பேச்சு நடத்தப்படும்.

சோனியா காந்தி பிரதமராக வருவதை நாங்கள் ஏற்கிறோம். சோனியா காந்தி வெளிநாட்டவர் என்று பாரதீய ஜனதா கூறிவருவது மிகப்பழைய வாதம்.

அவரை இந்தியராக நாட்டு மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். மக்களவை உறுப்பினராக உள்ள ஒருவர் பிரதமராக வருவதை யாரும் தடைகூறமுடியாது. மதச்சார்பற்ற கூட்டணியின் பிரதமர் யார் என்பதை தேர்தலுக்குப் பின் முடிவுசெய்வோம்.

தேசிய ஜனநாயகக் கூட்டணியில் சேருமாறு எங்களுக்கு ஜோர்ஜ் பெர்னாண்டஸ் அழைப்பு விடுத்தார். அதை எங்களது கட்சி நிராகரித்து விட்டது என்று அவர் தெரிவித்தார்.

# கூட்டணி குறித்துப் பேச ஜெயலலிதாவை சந்திப்பேன்

### ஜோர்ஜ் பெர்னாண்டஸ் பேட்டி

தேசிய ஜனநாயக் கூட்டணியில் அ.தி.மு.கவைச் சேர்ப்பது தொடர்பாக தமிழக முதல்வர் ஜெயலலிதாவுடன் விரைவில் பேச்சுவார்த்தை நடத்துவேன் என்று இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது,

பொதுச் செயல்திட்டத்துடன் தான் தேசிய ஜனநாயக் கூட்டணி மக்களவைத் தேர்தலைச் சந்திக்கும்.

தி.மு.க.வுடன் கூட்டணி முடிந்துவிட்டது. அவர்களுக்கு நாங்கள் கொடுத்த காலக்கெடு முடிந்து விட்டதால், இனிப் பேச்சுவார்த்தை நடத்தப்படமாட்டாது. மகாராஷ்டிரத்தில் தேசியவாதக் காங்கிரஸ் கட்சியுடன் பேச்சுவார்த்தை நடத்தமாட்டோம்.

தேசிய ஜனநாயக் கூட்டணியில் அ.தி.மு.கவைச் சேர்ப்பது குறித்து அந்தக் கட்சியின் பொதுச் செயலாளரான முதல்வர் ஜெயலலிதாவை சந்தித்து விரைவில் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளேன்.

மத்தியில் மூன்றாவது அணி என்பது நகைச்சுவையான ஒன்றாகும். இரண்டு நாட்களுக்கு முன் மத்திய அரசு அறிவித்த சலுகைகள் தேர்தல் ஆதாயத்திற்காக வெளியிடப்பட்டவை அல்ல. அரசு மேற்கொண்டு வரும் நற்பணிகளின் ஒரு பகுதியே அது என்றார்.

# புவியியல்
# விபரணப் புள்ளிவிபரவியல்

L.S.ஜெகன்- B.A(Hons).Geo.Spl

### இடை (Mean)

புள்ளிவிபரப் பரம்பல் ஒன்றின் சராசரிப் பெறுமானமே (Average) இடை ஆகும். இதனை

1. கூட்டலிடை (Arithmetic Mean)
2. பெருக்கலிடை (Geometric Mean)
3. இசை இடை (Harmonic Mean)

தொகுக்கப்படாத தரவுக்கான இடைப்பெறுமானத்தைக் கணிப்பதற்கான சூத்திரம்

$$\overline{X} = \frac{\varepsilon x}{n}$$

$\overline{x}$ = சராசரி
n = எண்ணிக்கை

உதாரணம்:- 40, 50, 60, 90, 30, 20, 70, 80, 50, 100

$= \frac{590}{10}$

$\overline{x} = 59$

தொகுக்கப்பட்ட தரவிற்கான இடைப்பெறுமானத்தைக் கணிப்பதற்கான சூத்திரம்

$$\overline{X} = \frac{\varepsilon \cdot x}{\varepsilon x}$$

$\overline{x}$ = ஊகிக்கப்பட்ட சராசரி
ε = மொத்த மீடிறன்

### இடையம் (Median)

கூட்டமாக்கப்படாத தரவுத் தொகுதி ஒன்று ஏறுநிரை பொருத்தப்பட்ட பின்னர் அந்தத் தொடரின் நடுப்பெறுமானம் இடையமாகும்.

தொகுக்கப்படாத தரவிற்கான இடையத்தினைக் கணிப்பதற்கான சூத்திரம்.

ஒற்றை எண் எனில் $\frac{n+1}{2}$ ம் ஈட்டு, உதாரணம் $\frac{11+1}{2}$ = 6 ம் ஈட்டு

இரட்டை எண் எனில் n/2 ம் ஈட்டு, 12/2 எனில் 6 ம் 7 ம் ஈட்டுக்களைக் கூட்டி 2 ஆல் வகுக்க வரும் பெறுமானமே இடையமாகும்.

உதாரணம்:- 40, 50, 60, 90, 30, 20, 70, 80, 50,100
20, 30, 40, 50, 50, 60, 70, 80, 90, 100 ஏறுவரிசைப் படுத்தப்பட்டது.

= 10/2 ம் ஈட்டு

$= \frac{5 ம் + 6 ம்}{2}$ ஈட்டு

$= \frac{50 + 60}{2}$

$= \frac{110}{2}$

= 55

தொகுக்கப்பட்ட தரவினை இடையப் பெறுமானத்தினைக் கணிப்பிடுவதற்கான சூத்திரம்.

$$m = L + \frac{n/2 - FxI}{£}$$

L - இடைய வகுப்பின் கீழ் எல்லை
F - இடைய வகுப்பின் மீடிறன்
I - வகுப்பு இடைவெளி
N - மொத்த மீடிறன்
£ - இடைய வகுப்பிற்கு முந்தைய வகுப்பின் திரள் மீடிறன்

### ஆகாரம் (Mode)

அதிக தடவை இடம் பெற்றுள்ள எண்ணே ஆகாரம் ஆகும்.

உதாரணம்:- 40 , 30, 20, 10, 30, 70, 80, 30
ஆகாரம் = 30

இந்த ஆகாரங்கள் தனி ஆகாரமாக அல்லது பல ஆகாரமாக அமையலாம்.

| x | f |
|---|---|
| 50 | 04 |
| 60 | 03 |
| 70 | 09 |
| 80 | 07 |
| 90 | 02 |

ஆகாரம் = 70

### விலகல் அளவைகள் (Measure of Dispersion)

தரவுத் தொகுதியொன்றின் மையப் பகுதியில் இருந்து மாறிப் பெறுமானங்கள் சிதறுகின்ற அளவினை அளவிடுகின்ற அளவை முறைகளே விலகல் அளவைகளாகும். இந்த விலகல் அளவை முறைகளின் பயன்பாடுகளாவன.

- மைய நாட்டத்தின் நம்பாத் தன்மையினை நியாயப் படுத்துதல்.
- இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தரவுத் தொகுதிகளின் மாறல் தொடர்பாக ஒப்பிடுதல்.
- மாறற் தன்மையினைக் கட்டுப்படுத்தல்.
- ஏனைய புள்ளியியல் அளவைகளின் பயன்பாடுகளை எளிதாக்குதல் போன்றவையாகும்.

விலகல் அளவைகள் பின்வரும் அம்சங்களைத் திருப்தி செய்யவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

- தரவுத் தொகுதியின் எல்லாப் பெறுமானங்களையும் உள்ளடக்கி கணித சூத்திரம்மூலம் திடமாக வரையறுக்கப்பட்டிருத்தல்.
- இலகுவாக விளங்கக்கூடியதாகவும், கணிப்பீட்டிற்குப் பயன்படுத்தக்கூடியதாகவும் புள்ளிவிபர மாறியானது அலகினையோ பரிமாணத்தினையோ கொண்டிருத்தல்.
- தொடர் கணிதச் செய்கைகளுக்கு உட்படுத்தக்கூடியவாறு அமைந்திருத்தல்
- மாதிரியினது ஏற்ற இறக்கத்தினால் மிகக்குறைவாகப் பாதிக்கப்படல் போன்றனவாகும்.

இவ்விலகல் அளவை முறைகளுள்

1. இடை விலகல், சராசரிவிலகல் (Mean Deviation)
2. நியமவிலகல் (Standard Deviation)

என்பன மிகவும் முக்கியமானவையாக நோக்கப்படுகின்றது.

### இடைவிலகல் (Mean Deviation)

தரவுக்கூட்டத்தின் மையப்பகுதியிலுள்ள யாதாயினும் ஒரு உற்பத்தி எல்லா உறுப்புக்களின் விலகல்களே இடை விலகலாகும்.

இந்த இடைவிலகலைக் கணிப்பிடுவதற்கான சூத்திரம் பின்வருமாறு.

$$MD = \frac{\varepsilon (x-\overline{x})}{n}$$

| x | x | (x-x̄) |
|---|---|---|
| 40 | 53 | -13 |
| 30 | 53 | -23 |
| 20 | 53 | -33 |
| 50 | 53 | -3 |
| 70 | 53 | +17 |
| 80 | 53 | +27 |
| 90 | 53 | +37 |
| 50 | 53 | -3 |
| 60 | 53 | +7 |
| 40 | 53 | -13 |
| Total | 53 | 179 |

$= \frac{\varepsilon (x-\overline{x})}{n}$

$= \frac{179}{10}$


= 17.9

= 18

(தொடரும்...)

இங்கே மடிக்கவும்





# மாணவர் மலர்

## மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும், மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப்பரீட்சை - 2004

பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையின் கீழ் கீறிடுக.

01. புகைத்தல் உடலுக்குப் பாதகமானது என்பதை அறிந்து இருந்தும் மனிதர்கள் கொண்ட பழக்கத்தை கைவிடத்தயங்குவதினால் புகைக்கின்றனர்.
இதில் காட்டப்பட்டுள்ள கருத்து பின்வருவனவற்றில் எது ஆகும்?
1. பழகப் பழகப் பாலும் புளிக்கும்.
2. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.
3. தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்.
4. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
5. தினை விதைத்தவன் தினையறுப்பான், வினை விதைத்தவன் வினையறுப்பான்.

02. பின்வரும் கூற்றின் ஒத்தகருத்தை தரும் கூற்றைத் தெரிவு செய்க.
வரட்சி அதிகரிக்கின்றது, நீர்த்தட்டுப்பாடு உக்கிரமாகிறது.
1. இரக்கம் அதிகரிக்கின்றது, நிவாரணம் கிடைக்கிறது.
2. மழை பெய்கிறது, ஆறு நிரம்புகிறது.
3. உலகம் மாறுகிறது, சுகம் கிடைக்கிறது.
4. சேவல் கூவுகிறது, சூரியன் உதிக்கின்றது.
5. ஆகாயம் மேலே, தரை கீழே.

03. பின்வரும் சிறுபந்தியுடன் அதிலுள்ள கருத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட இரு கூற்றுக்கள் (A,B) தரப்பட்டுள்ளன. அவ்விரு கூற்றுக்கள் தொடர்பாகத் தரப்பட்டுள்ள விடைகளில் திருத்தமானவிடையை தெரிவு செய்க.

**பந்தி:**

மனிதனிடம் இருந்து தனது தேவைகளைத் திருப்தி செய்யும் ஆசையைப் பிரிக்கமுடியாது. ஆகவே, மனிதன் வாழ்க்கைத் தேவைகளைத் திருப்தி செய்யும் முயற்சியில் தங்கியுள்ளது. இதற்குக் காரணம் மனித வாழ்க்கை தேவைகள் நிறைந்ததாக இருக்கின்றமையாகும்.

**கூற்றுக்கள்:**
A. மனிதன் வஞ்சகம் மிக்கவன்.
B. வாழ்க்கைப் பொருட்களின் நுகர்ச்சியில் தங்கியுள்ளது.

1. A மெய் B பொய்
2. B மெய் A பொய்
3. A மெய் B மெய்
4. A பொய் B பொய்
5. A,B இரண்டும் ஒருமித்துக் கூறப்படும்போது மெய்யானவை.

04. தொடர்பற்ற சோடிகளைத் தெரிவு செய்க.
1. கனவளவு - லீற்றர்
2. காலம் - செக்கன்
3. நீளம் - மீற்றர்
4. அமுக்கம் - பாரமானி
5. நிறை - கிராம்

05. தொடர்பற்ற சோடியைத் தெரிவு செய்க.
1. பயமற்ற - பயப்படும்
2. அலங்காரம் - அழகு
3. தெளிவு - சிக்கல்
4. தேசிய - அன்னிய
5. உத்தம - தாழ்ந்த

06. 6 ஆம், 7 ஆம், 8 ஆம் வினாக்கள் பின்வரும் தகவலை அடிப்படையாகக்கொண்டவை. லீலா, நீலா, கலா, மீரா, மாலா, மீனா, கீதா என்ற ஏழு பேரும் வட்டமாக இருந்து சாப்பிடுகின்றனர். மீனா, கீதாவிற்கு வலப்பக்கத்தில் இரண்டாவதாக இருக்கின்றாள். நீலா, கலாவிற்கு கிட்டவன்றி மீனாவிற்குக் கிட்ட இருக்கின்றாள். கலாவிற்குக்கிட்ட இருக்கும் மாலா, கீதாவற்கு வலப்பக்கத்தில் மூன்றாவதாக இருக்கின்றாள். மீரா, லீலாவிற்கும் கலாவிற்கும் இடையே இருக்கின்றாள்.

06. கீதாவிற்குக்கிட்ட இடப்பக்கத்தில் இருப்பவர் யார்?
1. மீரா 2. லீலா 3. கலா 4. மீனா 5. மாலா

07. நிலாவிற்கு இடப்பக்கத்தில் நான்காவதாக இருப்பவர் யார்?
1. லீலா 2. மீனா 3. கலா 4. மாலா 5. கீதா

08. கலாவிற்குக்கிட்ட இருக்கும் மாலா, கீதாவிற்கு வலப்பக்கத்தில் மூன்றாவதாக இருக்கிறாள். மீரா, லீலாவிற்கும் கலாவிற்கும் இடையே இருக்கின்றாள். கீதாவிற்கு அண்மையில் இடப்பக்கத்தில் இருப்பவள் யார்?
1. மீரா 2. லீலா 3. மீனா 4. மாலா 5. கலா

09. சிறுவர் நலனுடன் தொடர்புடைய ஐக்கிய நாடுகள் நிறுவனம்.
1. உனிராட் 2. யுனிசெவ் 3. நேட்டோ 4. சப்றா 5. யுனெஸ்கோ

10. இலங்கையில் கடதாசி தொழிற்சாலை அமைந்துள்ள இடம்
1. யாழ்ப்பாணம் 2. கொழும்பு 3. எம்பிலிப்பிட்டிய 4. பரந்தன் 5. நீர்கொழும்பு

11. முகச்சவரம் செய்வதற்கும் தலைமயிர் வெட்டுவதற்குமாக, ஒவ்வோர் ஆண்டிமிருந்தும் வரியை அறிவிடுவதற்கு யாதாயினும் ஓர் அரசு தீர்மானித்தால், ஏற்படக்கூடுமென கருதத்தக்க சில விளைவுகள் கீழே தரப்பட்டுள்ளன.

A. ஆண்கள் பலர் முகச்சவரம் செய்வதையும்,தலைமயிர் வெட்டுவதையும் கைவிடல்.

B. இந்தத் தொழிலில் ஈடுபட்டவர்களின் வருமானம் குறைதல்.

C. சவரக்கத்தி, சவர அலகு போன்ற உபகரணங்களை இறக்குமதி செய்வதற்கு செலவிடப்படும் அந்நியச் செலாவணியை வேறு பணிகளுக்குப் பயன்படுத்தத்தக்கதாக இருக்கின்றமை.

D. தாடி, தலைமயிர் ஆகியவற்றை வளர்ப்பவர்களும், வெட்டுபவர்களும் தனித்தனியாக அரசுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளல்.

ஏற்படக்கூடுமெனக் கருதப்படும் மேற்குறித்த விளைவுகளிடையே உண்மையில் மிகவிரைவாக ஏற்படத்தக்க விளைவுகளைக் கொண்ட விடை யாது?
1. A,C 2. C,D 3. A,B 4. B,D 5. A,D

12. சுற்றாடல் வெப்பநிலைக்கு ஏற்ப உடல் வெப்பநிலையை மாற்றும் விலங்கு யாது?
1. பாம்பு 2. நாய் 3. கரடி 4. புலி 5. திமிங்கிலம்


13. சுற்றாடல் வெப்பநிலைக்கு ஏற்ப உடல் வெப்பநிலையை மாற்றாத விலங்கு?
1. பாம்பு 2. தவளை 3. முதலை 4. ஓணான் 5. சிங்கம்

14. குருதிச்சுற்றோட்டத்தைக் கண்டுபிடித்த விஞ்ஞானி?
1. லூயி பாஸ்டர் 2. வில்லியம் ஹார்வே 3. மேரிகியூரி 4. ஐசாக் நியூட்டன் 5. ஹான் பொப்பர்

15. கல்வி, விஞ்ஞானம், பண்பாடு ஆகிய துறைகளில் தொடர்புடைய பணிபுரியும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம்.
1. உனிராட் 2. சியாற்றோ 3. சப்தா 4. யுனிசெவ் 5. யுனெஸ்கோ

16. பிழையான சோடியைத் தெரிவு செய்யவும்.
1. பல்லி - கத்தும் 2. மயில் - அகவும் 3. நாய் - குரைக்கும் 4. ஆடு - கத்தும்


17. விண் - 12, காகம் - 354, கடகம் - 5654
15651 இச்சொல்லின் கருத்து யாது?..................

18. 

π வரையைப் பயன்படுத்தி கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை தருக. சிறு குற்றம் முழுவதின் எந்த அளவு?

19. தவறு அமைக்கும் கோணம் யாது?

20. பின்வரும் சலாகைக்கோட்டு வரைபுகளைப் பயன்படுத்தி கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை தருக.




21. இரு வினாப்பத்திரத்திலும் 20 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள் சித்தி அடைந்தவர்கள் எனின், பரீட்சையில் யார் யார் சித்தி பெறுவார்கள்?


22. இரு வினாப்பத்திரத்திலும் 1:2 என்ற விகிதத்தில் புள்ளிகள் பெற்றது யார்?

23. இரு வினாப்பத்திரத்திலும் கூடியபுள்ளிகள் பெற்றது யார்?


24. சமமான கூட்டுத்தொகை பெறும் மாணவர்கள் யார்?

25. கீழே தரப்பட்ட வரைபுகளில் டிஜிற்றல் வரைபு யாது? (கோடு இடுக)





26. 

வட்டம் இடஞ்சுழியாகவும் வலஞ்சுழியாகவும் சுற்றினால் இரண்டும் எப்புள்ளியில் சந்திக்கும்?


27. 

இப்பரிசோதனை எதனைக்காட்டுகின்றது?

28. சரியான விடையின் கீழ் கோடிடுக.





1. 30 2. 308 3. 321 4. 348 5. 356

29. 



1. 30 2. 35 3. 40 4. 45 5. 54

30. தரப்பட்ட தையல்களில் அலங்காரத் தையல் யாது?
1. விஸ்வம் 2. பெருநூலோடி 3. சிறுநூலோடி
4. துன்னாத்தையல் 5. சங்கிலித்தையல்

31. பல்பக்கச் சமச்சீர் உரு எது?




32. நிழற்றிய பகுதியின் பின்னம் யாது?



33. நீரில் காணப்படும் மூலகங்கள் எவை?

(தொடரும்...)

T.அம்பிகைபாகன் B.Ed Tamil Sp. Trd ஆசிரிய ஆலோசகர், மேல்மாகாணம்

## கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர்தர)ப் பரீட்சை, 2004

## வணிகக் கல்வி

தொகுப்பு: B.S.பசீல் உடுவில் மகளிர் கல்லூரி

1. வினைத்திறன் (Effiepiency) விளைதிறன் (Effectiveness) என்னும் பதங்களை விளக்குக?
2. வினைத்திறன், விளைதிறன் எனும் பதங்களைப் பயன்படுத்தி முகாமை என்பதை வரைவிலக்கணப்படுத்துக.
3. முகாமையாளர் கொண்டிருக்கவேண்டிய மூன்று வெவ்வேறு தேர்ச்சித் திறன்களை கூறி விபரிக்குக.
4. வளம் எனப்படுவது யாது? அதில் அடக்கப்படுவற்றைக் கூறுக?
5. நிர்வாகக் கட்டமைப்பு (Hierarchy) எனப்படுவது யாது?
6. தொலைநோக்கு (Vision), இலச்சியநோக்கு (Mission) என்பவற்றை வேறுபடுத்துக.
7. ஒழுங்கமைத்தலின் நான்கு படிமுறைகளைக் கூறுக.
8. ஊக்கப்படுத்துதல் (Motivation) எனப்படுவது யாது?
9. தலைமைத்துவம் எனப்படுவது யாது?
10. பொறுப்பு (Responsibility) எனப்படுவது யாது?
11. முகாமைத்துவத்தின் விசாலம் (Span of Management) எனப்படுவது யாது?
12. திட்டமிடுதல் (Planning) தீர்மானம் (Decision making) செய்தல் என்பவற்றை வேறுபடுத்துக?
13. ஒரு முகாமையாளர் எப்போது தலைவராகக் கருதப்படுவார்?
14. ஒரு வணிக அமைப்பில் காணப்படும் ஆறு முக்கிய பண்புகளைப் பெயரிடுக?
15. தந்திரோபாயத் தீர்மானம் என்றால் என்ன?
16. நிறுவனம் ஒன்றிற்கு ஊக்கப்படுத்தலின் முக்கியத்துவத்திற்கான ஆறு காரணங்களைத் தருக?
17. நிறுவனத்தில் நெறிப்படுத்தல் என்ன செய்கின்றது?
18. ஒரு உத்தியோகத்தருக்கான அதிகாரமும் பொறுப்பும் எவ்வாறு காணப்படவேண்டும்? ஏன்?
19. உயர் ஒழுங்கமைப்பு எனப்படுவது யாது?
20. அமைப்பு வரைபடம்மூலம் எவை வெளிப்படுத்தப்படுகின்றது?

--- இங்கே மடிக்கவும் ---



# கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர்தர)ப் பரீட்சை, 2004 - ஏப்ரல்

## கணக்கீடு

01. நிதிக்கணக்கீட்டின் தொழிற்பாடுகளில் அடங்காதது
(1) பதிவு செய்தல்.
(2) வகைப்படுத்தல்.
(3) பொழிப்புரை கூறல்.
(4) திட்டமிடல்.

02. கணக்கீட்டுத் தகவலின் முக்கிய இயல்பில் ஒன்று
(1) இலாபத்தை கணித்தல்.
(2) ஆண்டறிக்கையைத் தயாரித்தல்.
(3) செலவுகளைக் கட்டுப்படுத்துதல்.
(4) பொருத்தமான தன்மைகொண்டிருத்தல்.

03. நிறுவனத்தால் கட்டுப்படுத்தக்கூடிய சூழல்
(1) சமூக கலாசாரச் சூழல்.
(2) பொருளாதாரச் சூழல்.
(3) தொழில்நுட்பச் சூழல்.
(4) அகச் சூழல்.

04. பின்வருவனவற்றுள் கிரயக் கணக்கீட்டுத் தகவல்
(1) விற்பனை 30 வீதம் அதிகரித்துள்ளது.
(2) கொள்விலையில் 20 வீதம் இலாபம் சேர்த்தே பொருட்கள் விற்கப்படும்.
(3) ஓர் அலகின் உற்பத்திக் கிரயம் ரூபா 350 ஆக அமையும்.
(4) ஓர் அலகின் விற்பனை விலை ரூபா 400 ஆகும்.

05. நிறுவனத்தின் அகச் சூழல் தொடர்பான நடவடிக்கை
(1) ஊழியர்களின் மறியல் போராட்டம்.
(2) நிறுவனத்தின் பிரதேசத்தில் இடப்பட்ட ஊரடங்குச் சட்டம்.
(3) வரவு செலவுத் திட்ட வெளியீடு.
(4) மேற்கூறிய எவையுமல்ல.

06. கணக்கீட்டுத் தகவல் கொண்டிருக்கவேண்டிய முக்கிய பண்பு
(1) அளவு இருத்தல்.
(2) பணப்பெறுமதியிருத்தல்.
(3) பயன்பாடு கூடியதாகவிருத்தல்.
(4) மேற்கூறிய எவையுமல்ல.

07. பின்வருவதில் எச்சோடி அதிகரிப்பதை வரவு வைப்பதற்குப் பொருத்தும்.
(1) உரிமையாண்மை, பொறுப்பு.
(2) செலவு, வருமானம்.
(3) சொத்து, செலவு.
(4) செலவு, பொறுப்பு.

08. பெயரளவுக் கணக்குக்குள் அடங்குபவை
(1) சொத்துக்கள் கணக்கு நீங்கலானவை.
(2) ஆள் கணக்கு நீங்கலானவை.
(3) சொத்து, ஆள் கணக்குகள் நீங்கலானவை.
(4) ஆள் கணக்குகள் மட்டும்.

09. விற்பனைப் பேரேட்டில் பதியப்படும் நடவடிக்கை
(1) கடன் விற்பனை.
(2) கடனுக்கு நிலையான சொத்து விற்பனை.
(3) நிலையான சொத்து காசிற்கு விற்பனை.
(4) காசு விற்பனை.

10. பின்வருவனவற்றுள் முதற்பதிவேடு அல்லாதது
(1) காசேடு. (2) விற்பனை நாளேடு.
(3) முறையான நாட்குறிப்பு. (4) பேரேடு.

11. "சில்லறைக் காசு கட்டுநிதி மீளளிப்புமுறை" என்பதன் கருத்து
(1) செலவுத் தொகையை எப்போதாவது வழங்கல்.
(2) முற்பணமாக வழங்குதல்.
(3) செலவு செய்த தொகையை நிரப்புதல்.
(4) பிரதம காசாளர் விரும்பும்போது காசை வழங்குதல்.

12. வியாபாரக்கழிவு தொடர்பான கணக்குப் பதிவு
(1) வியாபாரக்கழிவு கணக்குவரவு, கடன்பட்டோர் கணக்குச் செலவு.
(2) காசுக் கணக்கு வரவு, கழிவுக் கணக்குச் செலவு.
(3) இரட்டைப்பதிவு இல்லை.
(4) மேற்கூறிய எவையுமல்ல.

13. பின்வருவனவற்றுள் எப்போதும் வரவு மீதியைக் கொண்ட கணக்கு
(1) வங்கிக் கணக்கு. (2) கடன்பட்டோர் கணக்கு.
(3) காசுக் கணக்கு. (4) பெற்றதரகுக் கணக்கு.

14. உட்திரும்பலின் மூலப்பதிவு ஆவணம்
(1) செலவுத் தாள். (2) வரவுத் தாள்.
(3) பட்டியல். (4) மேற்கூறிய எவையுமல்ல.

15. பரீட்சைமீதி இணங்கினால் வரக்கூடிய முடிவு
(1) அனைத்தும் சரியாகப் பதியப்பட்டுள்ளது.
(2) கொடுக்கல் வாங்கல்கள் அனைத்தும் தவறிவிடாது பதியப்பட்டுள்ளது.
(3) பதிவுகள் எண்கணிதரீதியான பிழைகளைக் கொண்டிருக்கவில்லை.
(4) மேற்கூறிய எவையுமல்ல.

16. கட்டுப்பாட்டுக் கணக்கைப் பேணாத நிறுவனமொன்றின் கொள்வனவு நாளேட்டின் கூட்டுத்தொகை ரூபா 1200 ஆல் குறைத்துக் கூட்டப்பட்டால் நடப்பது
(1) கடன்கொடுத்தோர் கணக்கும் கொள்வனவுக் கணக்கும் அதிகமாகக் காணப்படும்.
(2) கொள்வனவுக் கணக்கு மட்டும் கூடுதலாகக் காணப்படும்.
(3) கடன்கொடுத்தோர் கணக்கும் கொள்வனவுக் கணக்கும் குறைவாகக் காணப்படும்.
(4) மேற்கூறிய எவையுமல்ல.

17. இலாபத்தைப் பாதிக்கும் வழு எது?
(1) பெற்ற தரகு பரீட்சைமீதிக்கு கொண்டுசெல்லப்படவில்லை.
(2) பொறிக் கணக்கு மீதி பரீட்சைமீதிக்கு செலவில் மாற்றப்பட்டது.
(3) பற்று பரீட்சைமீதிக்கு மாற்றப்படாமை.
(4) மேற்கூறிய எவையுமல்ல.

18. காசேட்டின்படி வங்கிமீதியும், வங்கிக் கூற்றின்படி மீதியும் இணங்காதத்திற்கான காரணம் அல்லாதது
(1) மாற்றப்படாத காசோலை.
(2) வசூலிக்கப்படாத காசோலை.
(3) மாற்றப்பட்ட காசோலை.
(4) மேற்கூறிய எவையுமல்ல.

19. காசேட்டின்படி வங்கி மீதியிலிருந்து வங்கிக் கூற்றின்படி மீதிக்குச் செல்லும்போது கழிக்கும் விடயம்
(1) மாற்றப்படாத காசோலை. (2) நேரடி வைப்பு.
(3) வசூலிக்கப்படாத காசோலை. (4) மேற்கூறிய எவையுமலல.

20. பாண் உற்பத்தி நிறுவனத்தின் நேர்ப்பொருள்
(1) போறணை. (2) அச்சுக்கள்.
(3) கோதுமை மா. (4) பொலித்தீன் பை.

(தொடரும்...)

ஆசிரியர்- D.S.A.M, உடுவில் மகளிர் கல்லூரி

# பஸ் நடத்துநர்கள், சாரதிகள் அனைவரும் முகச்சவரம் செய்திருக்க வேண்டும்

## தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் பணிப்பு

பஸ் நடத்துநர்கள், சாரதிகள் அனைவரும் முகச்சவரம் செய்து துப்புரவாக இருக்கவேண்டுமென, யாழ். மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர்களின் சங்கத் தலைவர் பொ. கெங்காதரன் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் கருத்துத்தெரிவிக்கையில் -

பஸ் நடத்துநர்களும், சாரதிகளும் முகச்சவரம் செய்யாது, அழுக்கான ஆடைகளை அணிந்தும் சேவை யில் ஈடுபடுகின்றனர். இதனால், பயணிகள் மத்தியில் ஒரு அதிருப்தி நிலவுகிறது. இதனை தவிர்க்கும் பொருட்டு சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு தற்போது அமுல்படுத்தப்பட்டுவருகிறது.

இதன் பிரகாரம் சாரதி, நடத்துநர்கள் அனைவரும் தாடியை மழித்து முகச சவரம் செய்திருத்தல் வேண்டும். நடத்துநர்கள் நீளக்காற்சட்டை அணிந்தே சேவையிலீடுபடமுடியும். சாரத்துடன் சேவையில் ஈடுபட அனுமதிக்கப்படமாட்டார்கள்.

மதுபானம் பாவித்தல், புகைத்தல், வெற்றிலை போடுதல் போன்ற பழக்கங்களையும் சேவையிலீடுபடும்போது தவிர்த்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு நடக்கத் தவறுவோர்மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். பொது மக்கள் இது தொடர்பான தகவல்களை தந்துதவவேண்டும் எனவும் தெரிவித்தார்.

மினிபஸ்களில் வேகக் கட்டுப்பாடு தொடர்பாக கேட்டபோது இதனை அவதானிப்பதற்கு நேரக்கணிப்பாளர்கள், அவதானிப்பாளர்கள் பிரதானவீதிகளிலே நிறுத்தப்பட்டுள்ளார்கள். சில முறைப்பாடுகள் கிடைத்துள்ளன, நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவருக்கு தேசிய மட்டச் சங்கத்திலும் நிர்வாக உறுப்பினர் பதவி வழங்கப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ச)

# சனசமூக நிலையத்துக்கான நன்கொடையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்

## சமாசக் கூட்டத்தில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

சனசமூக நிலையங்களுக்கு - வருடாந்த உதவி நன்கொடையாக வழங்கப்பட்டுவருகின்ற 1600 ரூபாவை 3000 ரூபாவாக அதிகரித்து வழங்க, நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

இவ்வாறு யாழ். மாவட்ட பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளரைக் கோரும் தீர்மானம், வலி. தென்மேற்கு பிரதேச சபைப்பிரிவு சனசமூக நிலையங்களின் சமாசத்தின் செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சனசமூக நிலையங்கள் நடாத்தும் முன்பள்ளிகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு, மிகவும் குறைந்த வேதனமே வழங்கப்பட்டு வருகின்றது. இவர்களின் வேதனத்தை அதிகரித்து வழங்குவதற்கும், ஒருங்கிணைந்த ஒரு திட்டத்தின்கீழ் வழங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்.

சனசமூக நிலையங்கள் தங்கள் தேவை பற்றிய விபரங்களை சமாசத்தின் ஊடாக உரிய அதிகாரிகளுக்கு சமர்ப்பிக்கவேண்டும்.

இவ்வாறான தீர்மானங்கள் சமாசத்தின் தலைவர் என்.ஜோன்சிங்கின் தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

# யாழ்ப்பாணம் பொது நூலகத்தை பாவனைக்குவிடக் கோரிக்கை

மக்களின் நன்மையைக்கருதி யாழ்.பொது நூலகத்தை உடனடியாகத் திறந்து, பாவனைக்கு விடுமாறு யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக, மாநகரசபை ஆணையாளர், புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், இந்து கலாசார அமைச்சு ஆகியோரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

தென்கிழக்காசியாவிலேயே சிறந்த நூலகமாகத் திகழ்ந்த யாழ். நூலகத்தின் இன்றையநிலை - தமிழ் மக்களின் நலனையும் மேம்பாட்டையும் விரும்பும் அனைவருக்கும் வேதனை தருவதாக இருக்கின்றது.

1953 ஆம் ஆண்டு அடிக்கல்லிடப்பட்ட இந்த நூலகத்திற்கு, முன்னாள் பத்திரிசியார் கல்லூரி அதிபர் லோங்அடிகளார் பெரும் பங்களிப்புச் செய்திருந்த போதும் 1954 ஆம் ஆண்டில் அவர் இலங்கை மண்ணை விட்டு வெளியேறியபோது இந்த நூலகம் நிறைவு செய்யப்படவில்லை என்ற மன ஏக்கத்துடனேயே சென்றார். 1981 ஆம் ஆண்டு இந்நூலகம் தீக்கிரையாக்கப்பட்டபோது, தாவீது அடிகளார் அந்த அதிர்ச்சியில் மரணமானார்.

1985ஆம் ஆண்டில் அரச படைகளால் இந்நூலகம் மீண்டும் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டமை - தமிழ் மக்களின் இந்த அரும்பெரும் சொத்தை எப்படியும் அழிக்கவேண்டும் என்ற கடின எண்ணப்போக்கையே வெளிக்காட்டியது.

அரசியல் போட்டி காரணமாக இந்நூலகம் திரும்பவும் பழைய நிலைக்குத் திருத்தி அமைக்கப்பட்டமையும், விசாரணைக்குழுவின் சிபார்சில் நட்டஈட்டுப்பணம் வழங்கத்தீர்ப்பளிக்கப்பட்டமையும் தமிழ் மக்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதமாகவே கருதப்படவேண்டியுள்ளது.

இருப்பினும், புனருத்தாரணம் செய்யப்பட்ட இந்நூலகம் - தனிப்பட்ட நலனையும், அரசியல் இலாபத்தையும் கருதி தேவையற்ற சாக்குப் போக்குக்களைக்கூறி இன்னும் திறக்கப்படாமல் இருப்பது வேதனை தருவதாக இருக்கிறது. இழந்து போன இந்தச் சொத்து ஏதோ ஒரு வகையில் திரும்பவும் எமது கைக்கு வந்துள்ள நிலையில், அதனைத் திறந்து பொதுமக்களின் பாவனைக்கு விடாதவாறு காலம் கடத்துவது சரியானதல்ல. தமிழ் மக்களின் பாரம்பரிய சொத்தான கல்வியை வளம் படுத்த, பொது அறிவினை வளர்க்க, மேற்படிப்பிற்கான ஆய்வுகளை மேற்கொள்ள, உசாத்துணை நூல்களைப் பெற்றுக்கொள்ள எனப் பல நலன்களைத் தமிழ் மக்கள் பெறத்தக்க விதமாக உடனடியாக இந்நூலகத்தை திறந்துவைக்கும்படி சம்பந்தப்பட்ட அனைவருக்கும் அவசர வேண்டுகோள் விடுக்கிறோம்.

சம்பிரதாய விழாக்களும், கோலாகல திறப்பு நிகழ்வுகளும் பல நீண்ட துயர அனுபவங்களைப் பெற்று வந்த யாழ்.நூலகத்துக்கு தேவையில்லை என்றே நாம் கருதுகிறோம். இனியும் எக்காரணத்தையும் கூறாது உடனடியாக நூலகத்தைத் திறந்து, பொது மக்களின் பாவனைக்கு உடன் அனுமதியுங்கள். இது இன்றைய அவசர தேவையாக உள்ளது இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

## நெடுந்தீவு - குறிகாட்டுவான்

# கடற்போக்குவரத்தில் ஈடுபடும் உதயதாரகை படகுசேவை ஸ்தம்பிதம் அடையும் நிலை

நெடுந்தீவு - குறிகாட்டுவான் இடையில் கடற்போக்குவரத்தில் ஈடுபடும் "உதயதாரகை" படகு - நேற்று முன்தினம் மாலை குறிகாட்டுவானிலிருந்து நெடுந்தீவுக்குப் பயணிகளுடன் வந்தவேளையில், மாவலி துறைமுக வாயிற்பகுதியில் சுக்கானிலுள்ள முக்கியபகுதி உடைந்தமையால், படகு கட்டுப்பாட்டை இழந்தது. பின்னர் படகோட்டிகளின் சாதுரியத்தினால் பெரும் ஆபத்திலிருந்து படகு துறைமுகப்பகுதியை வந்தடைந்தது. இதிலிருந்த பயணிகள் பெரும் பீதியுடன் வந்திறங்கியதைக் காணக்கூடியதாக இருந்தது.

குமுதினிப்படகு பழுதடைந்த காலம் தொடக்கம் நெடுந்தீவுக்கான பயணிகள் சேவையில் நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கத்தின் படகுகளான "உதயதாரகை", "சமுத்திரதேவா" ஆகியனவே ஈடுபட்டுவந்தன. "சமுத்திரதேவா" படகு கடந்த ஒரு வார காலமாகத் திருத்தவேலை காரணமாகச் சேவையில் ஈடுபடாமையினால், "உதயதாரகை" படகே சேவையில் ஈடுபட்டுவந்தது. தற்போது அதற்கும் பழுது ஏற்பட்டதனால், நெடுந்தீவுக்கான படகுப்போக்குவரத்து முற்றாக ஸ்தம்பிதமடையக்கூடிய வாயப்புகள் உள்ளன. கடந்த மூனறு மாதகாலத்திற்கு மேலாக குமுதினிப் படகு பழுதடைந்தபோதும், அதன் சேவையை மீண்டும் தொடர்வது தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர் எவ்வித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் மேற்கொண்டதாகத் தெரியவில்லை.

வீதி அபிவிருத்தி அதிகாரசபையினரின் இந்த அசமந்தப்போக்கினால், பயணிகள் படகுச்சேவை பெரும் பின்னடைவை எதிர்கொண்டுள்ளமை தொடர்பாக, நெடுந்தீவு மக்கள் மத்தியில் பெரும் விசனம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(113)

## வலி. வடக்கு பிரதேச

# 2004 ஆம் ஆண்டுக்கான கலாசார விழா எதிர்வரும் 17 ஆம் திகதி நடைபெறவுள்ளது

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு கலாசாரப் பேரவை நடாத்துகின்ற கலாசார விழாவில் 2004 ஆம் ஆண்டுக்குரிய விழா - எதிர்வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

அளவெட்டி பன்னாலை, இளவாலை கிராமங்கள் இணைந்து நடாத்துகின்ற இந்த விழா - அளவெட்டி சிறிசுப்பிரமணிய சுவாமிகள் ஞாபகார்த்த கலாசார நிலையத்தில் நடைபெறவுள்ளது.

கலாசாரப் பேரவையின் தலைவர் வை.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறுகின்ற இந்த விழாவில், இந்துசமய கலாசார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ள உள்ளார்.

யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ப.திலகநாயகம் போல, கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் நா.வேதநாயகன், வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் கலாநிதி க.குணராசா, வைத்திய கலாநிதி வை.யோகேஸ்வரன், தமிழீழ விடுதலைப் புலிகளின் தெல்லிப்பளை பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் பி.ஜெனா, வலிகாமம் வடக்கு உதவித்திட்ட பணிப்பாளர் ரதி நகுலேஸ்வரன், நிர்வாக உத்தியோகத்தர் இராஜகோபாலன், தெல்லிப்பளை பல நோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் சி.சிவமகாராசா, அளவெட்டி - மல்லாகம் பலநோக்கு கூட்டுறவுச் சங்க உபதலைவர் வி. விஜயகுலசிங்கம், ஓய்வுபெற்ற உதவி அரசாங்க அதிபர் க.நடராஜா, ஓய்வு பெற்ற பிரதிக்கல்விப் பணிப்பாளர் மு.சிவராஜரட்ணம், வேலைகள் அத்தியட்சகர் வலிகாமம் வடக்கு பிரதேச சபை ஐ.சிவலோகநாதன் ஆகியோர் சிறப்புவிருந்தினர்களாகக கலந்துகொள்ளவுள்ளனர். இந்த நிகழ்வில் பல்வேறுவகையான கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.



கேணல் கிட்டு நினைவுதினத்தை முன்னிட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் தேசிய எழுச்சிப் பேரவையினர் சிரமதானப் பணியில் ஈடுபடுவதனைக் காணலாம்.

# பழைய மாணவர் சங்க பொன்விழா நிகழ்வுகள்

வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் பொன் விழாவும், மலர் வெளியீடும் - எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. பழைய மாணவர் சங்கத் தலைவர் மு.சிவலோகநாதன் தலைமையில் காலை 10 மணிக்கு கல்லூரி விவேகானந்தா மண்டபத்தில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கல்லூரியின் முன்னாள் அதிபர் சி.சிவசரவணபவன், மூத்த பத்திரிகையாளர் எஸ்.எம். கோபாலரட்ணம், பழைய மாணவர்களான ந.மயில்வாகனம், எஸ். ஜெயலிங்கநாதன் ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

பழைய மாணவர் சங்கத்தின் ஐம்பது வருடகால நிறைவையொட்டி வெளியிடப்படவுள்ள நூலை - யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன வெளியிட்டு வைக்கவுள்ளார். இந்த நூலின் முதற்பிரதியை பாடசாலையின் அதிபர் எம். வன்னியசிங்கம் பெற்றுக்கொள்வார்.

இந்த நிகழ்வில் இந்த ஆண்டிற்கான புதிய நிர்வாகசபையும், புலமைப் பரிசில் நிதியக்குழுவும் தெரிவு செய்யப்படவுளளமை குறிப்பிடத் தக்கது. (91)

# சுகாதார சேவை விரிவாக்கத்திற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டின் குடிநீர் விநியோகம், சுகாதார பிரச்சினைகள் தொடர்பான செயலாற்று ஆய்வொன்றினை மேற்கொள்வதற்கென ஆசிய அபிவிருத்தி வங்கி சுமார் 10 லட்சம் அமெரிக்கடொலர்களை வழங்கியுள்ளது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசத்தின புனரமைப்பு புனர்வாழ்வுத திட்டங்களுக்காக 2 லட்சம் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு வழங்கியுள்ளதாகவும் யாழ். மாவட்ட செயலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஒன்பது மாதங்களுக்கு நடைமுறைப்படுத்தப்படவுள்ள இந்தச் செயலாற்று ஆய்வு, எதிர்வரும் மார்ச் மாதத்திலிருந்து மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்தச் சேவை தொடர்பாகத் தனித் தனியாகச் சிபார்சுகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்த செயலாற்று ஆய்வுமூலம், குடாநாட்டிலுள்ள குளங்களில் சேகரிக்கப்படும் நீர், மள்பாவனைக்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது இந்தச் சேவைகளில் காணப்படும் குறைபாடுகள்- இத்திட்டத்தினூடாக நிவர்த்தி செய்யப்பட்டு பாதுகாப்பானதும், நம்பகமானதுமான சேவையை மக்கள் பெற்றுக்கொள்ள வழியேற்படுமெனவும் கூறப்படுகிறது.

### செவ்வானம் இதழ் வெளிவந்தது.

கல்வி, கலை, கலாசார காலாண்டு இலவச இதழான செவ்வானத்தின் 6 ஆம் இதழ் - புதுவருட நத்தார் காலங்களில் அது சம்பந்தமான விடயங்களை ஏந்தி வெளிவந்துள்ளது.

குருநகர், சென்ஜேம்ஸ் கல்விக் கழகத்தால் வெளிக்கொணரும் செவவானத்தில் - கவிதைகள், கட்டுரைகள், செய்திகள், நேர்காணல் என்பன பிரசுரமாகி உள்ளன.

குருநகர் சென்ஜேம்ஸ் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க பிரான்ஸ் பிரதிநிதிகளால் வெளியிடப்படுகின்ற "அலையோசை" இதழின் 3 ஆம் இதழும் சமீபத்தில் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (206)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

நான்காவது அகவையில்



பெயர் : வ. சாணுகேசன்
முகவரி : மகாத்மா வீதி, நெல்லியடி.

## செய்திக் கட்டுரை - தி.விக்னேஸ்வரன் (ஆசிரியர்)

# தென்மராட்சிப் பிரதேச மக்கள் வாழ்வு விடியுமா?




பாதுகாப்பு வலயப் பகுதியில் - விறுமர் கோயில்

யாழ். குடாநாட்டையும் வன்னியையும் பிரிக்கும் எல்லைப்புறமாக அமைந்த வயல் வெளிகளையும், பனை தென்னை வளங்களோடு அழகிய கடற்பரப்பையும்கொண்டு எழில் கொஞ்சும் பிரதேசமாக விளங்குகிறது தென்மராட்சி தெற்குப் பிரதேசம்.

இந்தப் பிரதேசத்தில் 12.12.1999 இல் ஏற்பட்ட யுத்தத்தின் காரணமாக இந்தப் பகுதி மக்கள் தமது சொந்த வாழ்விடங்களை இழந்து உடுத்தஉடுப்புடன் இடம்பெயர வேண்டி இருந்தது. இதனால், தென்மராட்சி தெற்குப் பிரதேசத்தில் மொத்தம் 625 குடும்பங்களைச் சேர்ந்த 6040 பேர் முழுமையாக இடம்பெயர்ந்தனர். இதில் தனங்கிளப்பு, மறவன்புலவு கிராம அலுவலர் பிரிவுகளைத் தவிர்ந்த ஏனைய தென்மராட்சிப் பிரதேச மக்கள் மீளக்குடியமர அனுமதித்தபோதும் போதிய அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

தனங்கிளப்பு, மறவன்புலவு கிராம அலுவலர் பிரிவுகளில் - மீளக் குடியமரவும், விவசாயம், மீன்பிடி போன்றவற்றுக்கு அனுமதி அளிப்பதாகவும், பலதடவை பாது காப்பு அமைச்சு உறுதியளித்தபோதும் அதனைப் பின்னர் 'உயர் பாதுகாப்பு வலயம்' (**High Security Zone**) எனப் பிரகடனப்படுத்தியது. இருப்பினும் இந்தப் பிரதேச மக்கள் போராட்டங்களையும் எதிர்ப்பையும் காட்டியதன் பயனாக, 2002 ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் வயல் செய்வதற்காக மாத்திரம், சில கட்டுப்பாடுகளுடன் அனுமதிக்கப்படுகிறது என, யாழ். பாதுகாப்பு படைத்தரப்பு மையம் தெரிவித்தது. இதனால், இந்தப் பகுதி மக்கள் சில இடங்களில் வயல் நிலங்களைப் பண்படுத்தினர். இந்தநிலையில் பின்னர் அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. இதனால், இந்தப் பிரதேச விவசாயிகள் ஏமாற்றம் அடைந்தனர்.

மீளக்குடியமர அனுமதியளிக்கப்படாமல் இருக்கும் தனங்கிளப்பு, மறவன்புலவு பிரதேசங்கள் புவியியல் ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகிறது. யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கான முக்கிய நுழைவாயில்களில் ஒன்று ஆனையிறவு மற்றையது கேரதீவு.

ஆனையிறவுப் பாதை புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் போக்குவரத்துக்கு அனுமதியளித்திருந்தபோதும் கேரதீவு பாதையானது போக்குவரத்துக்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது.

கேரதீவில் இருந்து யாழ்ப்பாணம் 25 கிலோமீற்றர் வீதியைக் கொண்டுள்ளதுடன், வன்னியையும் குடாநாட்டையும் பிரிக்கும் ஒரு கிலோமீற்றர் கடற்பரப்பையும் கொண்டுள்ளது. இதில் மீளக் குடியமராத தனங்கிளப்பு மறவன்புலவு பிரதேசம் 15 கிலோமீற்றர் நீளமான யாழ். கேரதீவு வீதியையும் 4 கிலோமீற்றர் நீளமான தனங்கிளப்பு, சாவகச்சேரி வீதியையும் கொண்டு அமைந்து காணப்படுவதுடன், மறவன்புலவு 623 ஹெக்ரெயர், தனங்கிளப்பு 368 ஹெக்ரெயர் நெல்வயல் நிலங்களையும் கொண்டமைந்து காணப்படுகிறது.

அத்துடன் கேரதீவில் இருந்து மறவன் புலோவரை தென்புறமாக ஆழம்குறைந்த கடற்பரப்பாகவும் காணப்படுவதால், இந்தப் பிரதேசம் பொருளாதாரரீதியில் மிகவும் முக்கியமானது எனப் பல தடவைகள் சுட்டிக் காட்டியபோதும், இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் உயர்பாதுகாப்பு வலயப் பிரச்சினை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தொன்றாகக் காணப்படுவதால், யாழ். பலாலி உயர்பாதுகாப்பு வலயம் இராணுவத் தளபதியை ஈர்த்துள்ளது. இந்த வகையில் பலாலி உயர் பாதுகாப்பு வலய எல்லையிலிருந்து 600 மீற்றர் தொலைவில் உள்ள வீடுகளில் மீள்குடியமரவும் அந்தப் பகுதிகளில் விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் படையினர் இணக்கம் தெரிவித்துள்ளனரென, பலாலியிலுள்ள பாதுகாப்புப் படைத் தலைமையகம் தெரிவித்துள்ளபோதிலும், அது தொடர்பாக பொது மக்களுக்கு அறிவிக்கப்படவில்லை என 23.12.2003 ஆம் திகதி இடம்பெற்ற கலந்துரையாடலில் யாழ். அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் யாழ். மாவட்ட இராணுவத் தளபதியிடம் தெரிவித்தனர்.

இராணுவத் தளபதி அதற்குப் பதிலளிக்கையில் - 'வாழ்க்கைத் தரத்தையும் பொருளாதார வளர்ச்சியையும் மேம்படுத்தும் நோக்குடன் எடுக்கப்பட்ட இந்தத் தீர்மானங்களை பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையில் அறியத்தருகிறோம். வீடுகளில் மீளக்குடியமரவும், அந்தப் பகுதியில் விவசாயம் மேற்கொள்ளவும் பாதுகாப்புப் படையினர் இணக்கம் தெரிவித்துள்ளனர்'' எனக் குறிப்பிட்டார்.

இது ஓரளவு நிம்மதிப் பெருமூச்சுவிடக் கூடியபோதும், இதேபோன்ற உறுதிமொழிகள் தான் கடந்த வருடம் தென்மராட்சி தெற்குப் பிரதேசத்திற்கும் வழங்கப்பட்டிருந்தது. ஆனால், இதுவரை எந்தத் தளர்வும் மேற்கொள்ளப்படவில்லை.

விவசாயத்தைப் பொறுத்தவரை குடாநாட்டின் முக்கிய நெல்வயல் பிரதேசங்கள்- மறவன்புலவு, தனங்கிளப்பு ஆகிய இந்தப் பகுதியிலேயே காணப்படுகின்றன. இங்கு காணப்படும் வயல் நிலங்கள் குடாநாட்டின் பல்வேறு பிரதேசங்களில் வாழ்பவர்களுக்கும் இந்தப் பிரதேசத்தில் வாழ்பவர்களுக்கும் சொந்தமானவை. இந்தப் பிரதேசம் உயர் பாதுகாப்பு வலயமாக புதிதாகப் பிரகடனப் படுத்தப்பட்டதால், பிரதேசத்தில் விவசாயத்தை நேரடியாகவும் மறைமுகமாகவும் மேற்கொண்டுவந்த மக்கள் முழுமையாகப் பாதிப் படைந்துள்ளனர்.

மீன்பிடியைப் பொறுத்தவரையில் யாழ். குடாநாட்டைப் பிரிக்கும் கடல்நீரேரி ஆனையிறவில் இருந்து கல்முனைவரை காணப்படுவதுடன் இந்தக் கடற்பரப்பு ஆழம் குறைந்ததாகவும் காணப்படுவதால், இந்தப் பகுதியானது நவம்பர் - பெப்ரவரி மாதங்களில், இறால் முட்டையிட்டு குஞ்சுபொரிப்பதால், கேரதீவு, தனங்கிளப்பு, மறவன்புலவு, கோகிலாக்கண்டி, அரியாலை கிழக்கு, கல்முனை, கௌதாரி முனை, வெட்டுக்காடு, பூநகரி ஆகிய பிரதேசங்கள் - இறால்வளம் நிறைந்ததாகக் காணப்படுகிறது. இதுதவிர மீன் வளமும் அதிகமாகக் காணப்படுவதால், இந்தப் பிரதேசத்தில் மீன்பிடிக்கும் - இந்தப் பிரதேச மக்களும், குடாநாட்டின் ஏனைய பிரதேசங்களும் நன்மையடைந்து வந்தன. இந்தப் பகுதியைத் தற்போது உயர்பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தியதால், இதனை நம்பி வாழ்ந்த குடும்பங்கள் பாதிப்படைந்துள்ளன.

தென்மராட்சி தெற்குப் பிரதேசத்தில் - 1999 ஆம் ஆண்டுக்கு முன்னர் பூர்வீகமாக வாழ்ந்த மக்கள் முதற்தடவையாக திடீரென இடம்பெயரவேண்டி வந்தமையால், தமது உடமைகள் ஆவணங்களைத் தம்முடன் எடுத்துச் செல்லமுடியாது போனதால் - கல்வி, வேலைவாய்ப்பு, சொத்துக்கள் கைமாற்றல் போன்றவற்றில் அதிக சிரமங்களை எதிர்நோக்கி சொல்லொணாத் துன்ப துயரங்களை அனுபவித்து வருகின்றனர். அத்துடன், யாழ். மாவட்டத்தில் கைதுசெய்து காணாமற் போனோர் பட்டியலிலும் இந்தப் பிரதேசமே முன்னணி வகிக்கின்றது.

இந்தப் பிரச்சினைகள் சம்பந்தமாக இந்தப்பகுதி மக்கள் இந்த மாத நடுப்பகுதியில் உயர்பாதுகாப்பு வலயங்களைப் பார்வையிட வரும் ஐ.நா. மனித உரிமை ஆணையாளரிடம் எடுத்துக்கூறுவதுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கும் அழுத்தங்களைக் கொடுக்கவுள்ளனர்.



இந்தப் பிரதேசத்தில் மீளக்குடியமரவும், விவசாயம் மீன்பிடி போன்றவற்றை மேற்கொள்ளவும் அனுமதியளியாதுவிடின் சாத்வீக முறையில் போராட்டம் நடத்தவும் இந்தப் பிரதேச மக்கள் தயாராகி வருகின்றனர். ✷

## மக்களின் பிரச்சினைகள் - செந்தணன்

# வீண்காலதாமதத்தை ஏற்படுத்தும் வைத்தியசாலை விசாரணைகள்

யாழ் போதனா வைத்தியசாலையில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளில் மிக முக்கியமான ஒன்றாக இன்று பலராலும் குறிப்பிடப்படுவது மரணவிசாரனை மற்றும் பொலிஸ் விசாரணை என்பவற்றில் காணப்படும் தாமதம் மற்றும் அதனாலேற்படும் வீண் நேரச்செலவு பணச் செலவுமாகும்.

இந்த விடயம் தொடர்பாக, மிகவும் பாதிக்கப்படும் ஏழைகள் பல தடவை வைத்தியசாலை நிர்வாகத்திடம் முறைப்பாடு தெரிவித்தும், அது தொடர்பாக இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பல்வேறு சாட்டுப் போக்குக்களைச் சொல்லி தம்மைக் காத்துக்கொள்ள நினைக்கும் அவர்கள், தமது சேவையினை மக்கள் முழுநிறைவோடு பெறுவதற்கு வழிசெய்ய எண்ணுவதாகத் தெரியவில்லை.

விபத்துக்குள்ளான ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டால், அவருக்கு ஏற்பட்ட காயம் சிறிதோ அல்லது பெரிதோ - அவர் ஒருவாரம் வைத்தியசாலையில் தங்க வைக்கப்படுகிறார். காரணம் கேட்டால் சட்ட வைத்திய அதிகாரி பார்க்கவேண்டும். விபத்துத் தொடர்பாக வழக்குப்பதிவுசெய்யவேண்டும் என்பார்கள். சட்ட வைத்திய அதிகாரியும் ஓரிரு நாட்களில்வந்து பார்த்து விட்டுப்போனபின், பொலிஸ் விசாரணைக்காகக் காத்திருக்க வேண்டும்.

பொலிஸ் விசாரணை ஞாயிறுகளில் நடத்தப்படுவது இல்லை. அதைவிட இரு தமிழ்ப் பொலிஸார் மட்டுமே இந்த விசாரணைகளுக்காக நியமிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களில் ஒருவர் பெண். மற்றவர் ஆண். பெண் நோயாளியரிடம் பெண் பொலிஸும், ஆண் நோயாளர்களிடம் ஆண் பொலிஸும் விசாரணையை மேற்கொள்வார்கள்.

இவர்களில் ஒருவர் விடுமுறையில் சென்றாலும், நோயாளர்கள் அவர் கடமைக்கு வரும்வரை வைத்தியசாலையில் தொடர்ந்தும் தங்க நேரிடுகிறது. இதனால், நோயாளிக்கு வீண்செலவுகள் ஏற்படுவதுடன் வைத்தியசாலையில் ஓரிடமும், வீணாக நிரப்பப்பட்டிருக்கவேண்டி நிலையும் ஏற்பட்டிருக்கிறது.

விபத்தில் காயப்பட்ட ஒருவர் வைத்தியரிடமோ அல்லது தாதியரிடமோ தம்மை வீட்டுக்கு அனுப்புங்கள் எனக் கேட்டால், அவர்கள் 'வேண்டுமானால், நீங்களாகப் போகலாம். நாம் உங்களைத் துண்டு வெட்டி அனுப்பமுடியாது' என்று கூறுவதும் உண்டாம்.

தொடர்ந்தும் சிகிச்சைபெறவேண்டி நேரிடும் என்பதால், நோயாளர்கள் தொடர்ந்தும் வைத்திய சாலையில் தங்கியிருக்கவேண்டி ஏற்படுகிறது.

### மரண விசாரணை

மரண விசாரணையைப் பொறுத்தவரையில் இதுதொடர்பான பல சிக்கல்கள் நிலவிவருகின்றன. மரண விசாரணை தொடர்பான பல முறைப்பாடுகள் யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் தெரிவிக்கப்படுகின்றன.

பிரேத பரிசோதனைகள் மற்றும் மரண விசாரணை தொடர்பாகப் பல திருப்தியீனங்கள் பொதுமக்களால் தெரிவிக்கப்பட்டு வருகின்றபோதிலும், நாம் மக்களுக்கு ஏற்படக் கூடிய காலதாமதம் மற்றும் சிரமங்களைமட்டும் இக்கட்டுரையின் மூலம் நோக்குவது பொருத்தமாக இருக்கும் எனக்கருதுகிறேன்.

அகாலமரணமடையும் ஒருவர் வைத்தியசாலையில் மரணமடைந்தாலோ, அல்லது வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்படும் வழியில் மரணம் அடைந்தாலோ, அவரது உடலை உறவினர்கள் பெற்றுக்கொள்வதற்கு - மரணமடைந்தவர்களுடைய பகுதிக்குரிய பொலிஸார் அவரின் விபரத்தை உறுதிப்படுத்த வேண்டும். அதுமட்டுமன்றி இவற்றை அப்பகுதி நீதிவான் உறுதிப்படுத்துவதுடன் அவர் வைத்தியசாலைக்கு வந்து உறுதிப்படுத்தவேண்டிய கடப்பாடும் கட்டாயமும் உண்டு. அதுவரையில் உடலை வைத்தியசாலைக்கு வெளியில்கொண்டு செல்ல முடியாதநிலை காணப்படுகிறது.

இதனால், பல மன உளைச்சல்களை இறந்தவர்களின் வீட்டார்கள் அடையநேரிடுகிறது. இதனைவிட மரணமடைந்தவரின் இடத்துப் பொலிஸாரை அழைத்துவருவது முதல், நீதிவானை அழைத்துவருவதுவரை போக்குவரத்துச் செலவு உட்பட அனைத்துச் செலவுகளையும் இறந்தவரின் வீட்டாரே செய்யவேண்டியுள்ளது. இந்த நடைமுறை காரணமாக ஏழைகள் பெரும் கஷ்டப்பட வேண்டியுள்ளது.

மக்கள் தமது உள்ளக்குமுறல்களை வெளிப்படுத்தும்போது - வைத்தியசாலையின் வாசலில் நிற்கும் சாதாரண ஊழியர்களுடனும், பாதுகாப்பு உத்தியோகத்தர்களுடனும் முரண்பட்டுக்கொள்ள நேரிடுகிறது.

இதுகுறித்து வைத்தியசாலை நிர்வாகத்திடம் வினவியபோது -நிர்வாக ஒழுங்கிலிருந்து தாம் விலக முடியாது என்றும், யாழ். வைத்தியசாலையில் இரு தமிழ் பொலிஸார் மட்டுமே கடமையில் ஈடுபடுவதும் உண்மையே எனவும் தெரிவித்தனர்.

மரண விசாரணைக்கென விரைவிலேயே தற்போது கடமைபுரியும் ஒரு அதிகாரியுடன் மேலும் ஒரு அதிகாரி நியமிக்கப்படவிருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

சட்டம், ஒழுங்கு அவசியம்தான். அதற்காக இறந்தவர்களின் உடலை நாற்றமெடுக்கும்வரை வைத்திருப்பதும் காயமடைந்தோரை வீணாக வைத்தியசாலையில் தங்க வைத்திருப்பதும் - மனச் சங்கடத்திற்குரிய, நியாயத்திற்குப் புறம்பான, மனிதத்தை அவமதிக்கும் செயலாகும்.

இதனைவிட சட்டம் ஒழுங்கு பற்றிப் பேசுவோர் தமது கடமையைச் சரியான நேரத்தில், சரியாகச் செய்தால்கூட இத்தகைய தவறுகள் ஏற்படாது என்பதையும் மனதிற்கொள்ளவேண்டும். ❐

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்துஒருபால்*
*கோடாமை சான்றோர்க்கு அணி.*

திருக்குறள்.

# நமது நோக்கு

## தேவை; இதயசுத்தியுடன் கூடிய முயற்சியே!

சிறிலங்காவின் இன விவகாரத்திற்கு அமைதி முயற்சிகள் மூலம், அரசியல்ரீதியில் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு, நியாயமானதும், உறுதியானதுமான ஒரு தீர்வினை எட்டுவதில் தமக்குள்ள விருப்பார்வத்தையும், உறுதிப்பாட்டையும் மீண்டும் ஒருமுறை சர்வதேச சமூகத்திற்கு புலிகள் வெளிப்படையாகவே தெரிவித்துள்ளனர் என்றே கூறவேண்டும்.

சர்வதேச சமூகமானது எந்த சூழ்நிலையில், எந்த நோக்கோடு சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும் செயற்பாடுகளுக்கு உதவ முன்வந்ததோ, அதே நிலைப்பாட்டில் தொடர்ந்தும் உறுதியாக நின்று - இதய சுத்தியுடன் அந்த முயற்சிக்கு தொடர்ந்தும் உதவவேண்டுமென அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தனது உரையொன்றில் குறிப்பிட்டுள்ளமை தொடர்பாகவே மேற்குறித்த கருத்து நிலைக்கு வரமுடிந்துள்ளது.

அவரது இந்த கருத்து தெளிவானதும், சர்வதேச சமூகத்திற்கு ஒரு உறுதியான கோரிக்கையை முன்வைக்கும் தன்மை கொண்டதுமாகும்.

தற்போது தேக்கநிலையை எட்டியுள்ள சமாதான முயற்சிகளுக்கு இரு வருடங்களின் முன்னர் சுயாதீனமான முறையில் கால்கோள் இட்டது - விடுதலைப் புலிகள் ஒரு தலைப்பட்சமாக அறிவித்த யுத்தநிறுத்த பிரகடனமேயாகும்.

போர்க்களத்தில் மிகப்பெரும் வெற்றிகளையும் பெற்று படைகளுக்கு பேரழிவையும், மனோபலச் சிதைவையும் ஏற்படுத்தி - இராணுவரீதியில் வலுவான நிலையில் நின்றுகொண்டு விடுதலைப் புலிகள் நல்லெண்ணச் சமிக்ஞையாக ஒருதலைப்பட்ச போர்நிறுத்தத்தை அறிவித்தமை அனைவரும் பிரமித்து நோக்கிய விடயமாகும்.

தொடர்ந்து யுத்தத்தை முன்னெடுக்கும் ஆற்றலும், போரியல் திறனும் மட்டுமல்ல, வெற்றியைத் தமதாக்கி, தமது இலட்சிய இலக்கினை எட்டும் மனோபலமும் விடுதலைப் புலிகளிடம் மேலோங்கிய நிலையில்தான், அவர்கள் போர்நிறுத்த அறிவிப்பை வெளியிட்டார்கள்.

தேர்தல் நடைபெற்று, போர்வெறி மிகுந்த சந்திரிகா தலைமையிலான ஆட்சி மக்களால் நிராகரிக்கப்பட்டு - ரணில் தலைமையில் புதிய அரசொன்று சிறிலங்காவில் அமைந்தவேளையில், விடுதலைப் புலிகளின் போர்நிறுத்த அறிவிப்பு வெளியானமை சர்வதேச சமூகத்தால் பெரிதும் வரவேற்கப்பட்ட ஒன்றாயிற்று.

புலிகளின் அறிவிப்பை தனது பதில் அறிவிப்பின்மூலம் ஏற்றுக்கொள்ளவேண்டிய அவசியம் ரணிலுக்கு ஏற்பட, சர்வதேச சமூகத்தின் பின்னணியும் ஒரு காரணமாகும்.

போர்நிறுத்த அறிவிப்பை ஏற்றுக்கொண்டு, சமாதான நகர்வுகளைத் தொடருவதற்கான வழிமுறைகளைப்பற்றி ஆராய, அதே சர்வதேச சமூகத்தின் உதவியை நாடவேண்டிய தேவை ரணிலுக்கும் ஏற்படுவதற்கு நாட்டின் அப்போதைய பொருளாதார நிலையும் ஒரு காரணமாயிது.

சந்திரிகா மேற்கொண்ட சமாதானத்திற்கான யுத்தம் காரணமாக - நாட்டின் திறைசேரி வெறுமையாகிப் போயிருந்தது.

யுத்தத்திற்கு பெருமளவில்... அதாவது கோடிக்கணக்கான டொலர்களை நிதியாகவும், ஆயுதமாகவும் மற்றும் ஏனைய இராணுவ உபகரணங்களாகவும் வழங்கிக் களைத்துப்போன சர்வதேச நாடுகளின் பலவுக்கும் - இராணுவத்திற்கு போரில் கிடைத்த தோல்விகளும், பின்னடைவும் பெரும் ஏமாற்றத்தையே அளித்தது.

இந்த நாடுகளில் சில - இராணுவத்திற்கும், ஏனைய ஆயுதப் படையினருக்கும் போர்ப் பயிற்சியை வழங்கிய பெருமைக்கும் (!?) உரியவர்களே...

எனவேதான், இந்த நாடுகள் சமாதானத்தை வலியுறுத்துவதன்மூலம் சிறிலங்காவை பெரும் நெருக்கடிக்குள் இருந்து மீள வழிகாட்டினர்.

சமாதான சூழல் என்பது அன்றையநிலையில் அரசுக்கும், சர்வதேச அமைப்புக்களுக்கும் மிக அவசியமான ஒன்றாக இருந்ததில் வியப்பில்லை. ஆனாலும்கூட தொடர்ந்து சில நாடுகள், நாடுகளுக்கிடையேயான பரஸ்பர வழமையான நடவடிக்கை என்ற பேரில், சமாதானப் பேச்சுக்கள் முனைப்புடன் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருந்த வேளையிலும், தொடர்ந்தும் படைகளுக்கு ஆயுதங்களை வழங்கி யும், பயிற்சிகளை அளித்தும் போர் நிலைக்கு அவர்களைத் தயார்படுத்தி வந்தமையானது - யுத்தநிறுத்த உடன்படிக்கையை மீறும் செயலாகவே கருதப்பட்டது.

இதன்மூலம் 'இராணுவ சமநிலை பேணப்படல்' என்ற புரிந்துணர்வு உடன்பாட்டின் சரத்தும் மீறப்பட்டது.

இதனை விடவும் சில சம்பவங்கள் விடுதலைப் புலிகளின் பொறுமையைச் சோதிப்பதாக, எச்சரிக்கையாக படைத்தரப்பால் மேற்கொள்ளப்பட்டபோதும் - புலிகள் போர்நிறுத்தத்தைப் பேணுவதிலும், சமாதானத்தை முன்னெடுப்பதிலும் தமக்குள்ள உறுதிப்பாட்டை இன்றுவரை வெளிப்படுத்தியே வருகின்றனர்.


இந்நிலையில் இன்றைய அரசியல் நெருக்கடியானது சிறிலங்காவின் இரட்டை அரசின் சமாதானம் தொடர்பான உறுதியற்ற - இன்னும் சொல்லப்போனால், சர்வதேச சமூகத்தை ஏமாற்றும் தன்மை கொண்டதான நிலைப்பாட்டினை உலகம் புரிந்துகொள்ளவேண்டிய அவசியமுண்டு. சிறிலங்காவுடன், தமது புவிசார் அரசியல் மற்றும் இராணுவ நலன்களுக்காக பாதுகாப்பு ஒப்பந்தங்களை மேற்கொள்வதன் மூலம், அதன் அடிப்படையில் படைகளுக்கு எல்லாவகையிலும் உதவ முன்வருவதானது - சமாதான முயற்சிகளுக்கு எதிரான செயற்பாடுகளேயாகும்.

அத்தகைய முயற்சிகளில் ஈடுபடும் நாடுகள் சமாதானத்தை வலியுறுத்தும் தகைமையை இழந்தவர்களேயாவர். அதனால் தான், இதயசுத்தியோடு சமாதான முயற்சிகளுக்கு உதவ வேண்டுமென அரசியற்றுறைப் பொறுப்பாளர் வலியுறுத்தியுள்ளார் என்றே கூறவேண்டும்.

ஆயுதப்படைகளுக்கு உதவிக்கொண்டு சமாதானத்தை வலியுறுத்துவது - அமைதி முயற்சிகளை அவமதிக்கும் செயற்பாடாகவும், போரைத் தூண்டும் முயற்சியாகவுமே அமையும்.

சம்பந்தப்பட்ட நாடுகள் இதனைக் கருத்திற்கொள்வது அவசியமாகும்.

# நாடும் நடப்பும்




செய்தி - ரணில் - சந்திரிகா இருவருக்கும் இடையில் நடக்கும் அதிகார இழுபறியில் பாதிக்கப்படுவது தமிழ்மக்கள்தான்.

# நெடுங்கேணி சுற்றயல்கூற்று மருத்துவமனை 20 இலட்சம் செலவில் புனரமைக்கப்பட்டு திறப்பு

ஜெயசிக்குறு படை நடவடிக்கையால் தேசமாக்கப்பட்ட நெடுங்கேணி சுற்றயல்கூற்று மருத்துவமனை - ரூபா 20 இலட்சம் செலவில் புனரமைக்கப்பட்டு நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

நேற்று முன்தினம் காலை 11.30 மணியளவில் வவுனியா மாவட்ட பிரதி மாகாண சுகாதாரப் பணிப்பாளர் கேதீஸ்வரன் தலைமையில் நடந்த நிகழ்வில், வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு செயலர் ஆர்.எம்.எஸ் ரட்ணாயக்க, வடக்கு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் திட்டப்பணிப்பாளர் - எஸ்.குமாரவேல் மற்றும் யுனிசெப் திட்ட இணைப்பாளர் ஐ.எ. ஹமீத், இலங்கைக்கான போரூட் நிறுவனவதிவிட பிரதிநிதி போல் ஹென்றிகீலன், விடுதலைப் புலிகள் தரப்பில் தமிழீழ சுகாதார சேவைகள் உதவிப் பணிப்பாளர் தமிழ் வாணன், வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சினால் 20 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட இந்த வைத்திய சாலையில், நோயாளர்கள் தங்கி சிகிச்சை பெறுவதற்கு 12 கட்டில்கள் கொண்ட விடுதி, அம்புலன்ஸ் வண்டி மற்றும் மின்கலத் தொகுதி என்பன தற்போது கிடைத்துள்ளன.

தமிழீழ சுகாதார சேவைகளின் உதவிப்பணிப்பாளர் தமிழ் வாணணின் தேசியக் கொடியேற்றலை அடுத்து, வைத்திய சாலையின் பெண்கள் விடுதியினை வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலர் ஆர்.எம்.எஸ். ரட்ணாயக்கவும், ஆண்கள் விடுதியினை வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் திட்டப்பணிப்பாளர் எஸ். குமாரவேலும், வைத்தியர்களுக்கான விடுதியை நெடுங்கேணி பிரதேச செயலர் ஐயம் பிள்ளையும் திறந்து வைத்தனர்.

இவ்வாறு நெடுங்கேணி சுற்றயல்கூற்று மருத்துவமனையை திருத்தி திறந்தபோதும், இந்த வைத்தியசாலைக்கென ஒரு நிரந்தர வைத்தியரும் இதுவரை நியமிக்கப்படவில்லை. அத்துடன், இந்த வைத்தியசாலைக்கு வவுனியா வைத்தியசாலையிலிருந்து வாரத்திற்குகொருதடவை ஒரு வைத்தியர் வீதம் வந்து சிகிச்சையளிப்பார்கள் என வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் திட்டப்பணிப்பாளர் தெரிவித்தார்.

இதேவேளை, நெடுங்கேணி வைத்தியசாலையை மேலும் நவீனப்படுத்தி புதிதாக கட்டுவதற்காக நிகொட் நிறுவனத்தால் ஐந்து ஏக்கர் காணி கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் இந்த புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நடைபெற இருந்தபோதும், தவிர்க்கமுடியாத காரணத்தால் அது நடைபெறவில்லை. 210 ரூபா லட்சம் செலவில் அமையவுள்ள இக்கட்டடவேலைகள், ஒரு வருடகாலத்திற்குள் முடிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (03)

# 300 க்கும் மேற்பட்ட காணி வழக்குகள் யாழ். பொலிஸ் நிலையத்தில் பதிவு!

சென்ற வருடம் யாழ்.பொலிஸ் நிலையத்தில் 300 இற்கும் மேற்பட்ட காணி முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

தற்போது யாழ்.குடாநாட்டில் காணிப் பிணக்குகள் அதிகரித்து வருகின்றன. இதன்காரணமாக சென்றவருடம் 300 இற்கும் மேற்பட்ட காணி வழக்குகள் பதிவாகியுள்ளன. இதற்கு அடிப்படைக் காரணம் - காணி உரிமையாளர்கள் வேறு இடங்களில் வசிப்பது, தற்காலிகமாகக் குடியமர்ந்தவர்கள் தமக்கு உரிமை உண்டு எனக் கோருவது போன்ற விடயங்களாகும்.

இவற்றைவிட, பாதை பிரிப்பது தொடர்பான உறவினர்களுடன் முரண்பாடுகள் தொடர்பான முறைப்பாடுகள் அதிகம் பதியப்பட்டுள்ளன. யுத்த காலத்தில் ஏற்பட்ட அனர்த்தங்களினால் எல்லைகள் அழிவடைந்தநிலையில் உள்ளன. மீளக் குடியமரச்செல்லும் மக்களிடையே காணிப் பிணக்குகள் ஏற்படுகின்றன. இவற்றைவிட, ஒரு காணிக்கு இரண்டு உறுதிகளும் உண்டு. யார் உரிமையாளர் என்று கண்டுபிடிக்கவேண்டியுள்ளது.

இவ்வாறான பிணக்குகள் தொடர்ந்து அதிகரித்த வண்ணம் உள்ளன. சென்ற மாதம் 20 இற்கும் மேற்பட்ட காணி முறைப்பாடுகள் பதியப்பட்டுள்ளன எனவும் யாழ்.நிலைய பொலிஸார் தெரிவித்தனர்.

### அரச திணைக்களங்களில் பணிபுரியும்

# தற்காலிக அமைய ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை

அரச நிறுவனங்கள், திணைக்களங்களில் தற்காலிகமாகவும், அமைய மற்றும் ஒப்பந்த அடிப்படையிலும் பணிபுரியும் ஊழியர்களை நிரந்தரமாக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.மாவட்டத்தில் இவ்வாறு பணியாற்றும் ஊழியர்கள் தொடர்பான விபரங்களை- நிறுவன மற்றும் திணைக்களத் தலைவர்களிடம் சமர்ப்பிக்குமாறு அரச அதிபர் கேட்டுள்ளார். இது தொடர்பான கடிதங்கள் உரிய திணைக்களங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்த ஊழியர்கள் பணிபுரியும் நிறுவனங்களுக்குப் பொறுப்பான அமைச்சுக்களால் நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பாகப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. எனவே, ஊழியர்களின் பெயர் விபரங்களை உடனடியாக அனுப்பிவைக்கவும். தவறும் பட்சத்தில் நிரந்தர நியமனத்தை பெற்றுக்கொள்ள முடியாமற்போகும் எனவும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, கடந்த முதலாம் திகதி நிலவரங்களின்படி திணைக்களங்களிலுள்ள பதவிவெற்றிடங்கள் தொடர்பாகவும் தனக்கு அறியத்தரும்படியும் அரசு அதிபர் திணைக்களத தலைவர்களைக் கேட்டுக்கொண்டுள்ளார். (ச)

# தொழிற்துறை திணைக்களத்துடன் தொடர்புகொள்ளக் கோரிக்கை!

நிரந்தர நியமனம் வழங்கும் நடவடிக்கை தொடர்பாக கலந்துரையாடுவதற்காகத் தொழிற்துறை திணைக்களத்தில் பணியாற்றும் பின்வரும் தற்காலிக ஊழியர்களை தன்னோடு தொடர்பு கொள்ளுமாறு தொழில்துறைத் திணைக்கள அதிகாரி ச.இராகவன் கேட்டுக்கொண்டுள்ளார்.

கோப்பாய் பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த பத்தமேனி நெசவுநிலைய போதனாசிரியர் ஏ.இரத்தினம், சிறுப்பிட்டி நெசவுநிலைய காவலாளி கே.காண்டீபன், உடுவில் பிரதேச செலகப் பிரிவைச் சேர்ந்த ஏழாலை நெசவுநிலைய போதனாசிரியர் ஜே.பரமராணி, கரவெட்டி பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த இமையாணன் நெசவுநிலைய போதனாசிரியர் ஏ.தனலட்சுமி ஆகியோரைத் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. இன்று மாலைக்குள் விபரங்கள் சமர்ப்பிக்கவேண்டியுள்ளதால், தவறாது தன்னைச் சந்திக்கும்படியும் அதிகாரி சி.இராகவன் தெரிவித்தார். (ச)

# அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான இலவச ஆயுள் காப்புறுதி வழங்கும் திட்டம்

அறநெறிப் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான இலவச ஆயுள்காப்புறுதி வழங்கப்படவுள்ளது. நாடு முழுவதிலுமுள்ள ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் இந்த நன்மையைப் பெறவுள்ளனர்.

வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சின் கீழ் இயங்கும் மஹாபொல உயர்கல்வி நிதியம், இதற்கான முன்னோடி ஏற்பாடுகளை மேற்கொண்டுவருவதாக அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார். ஆயுள்காப்புறுதிகளுக்கான பத்திரங்கள் இந்தமாதம் 26 ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது.

தமது அறநெறிப் பாடசாலைக்கு பொறுப்பானவர்களிடம் இருந்து சமுகமளிக்கும் ஆசிரியர்கள் - அத்தாட்சிப்படுத்தும் சான்றிதழைப் பெற்றுவரும்படியும், தமது அடையாள அட்டையைத் தம்முடன் கொண்டுவரும்படியும் கேட்கப்பட்டுள்ளனர்.

அறநெறிப்பாடசாலை ஆசிரியர்கள் தமது வருகையை நிதியத்தின் பணிப்பாளர் ருக்மல் பெரேராவுடன தொடர்பு கொண்டு அறிவிக்கமுடியும்.

இம்மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் ஆசிரியர்கள் தம்மைப் பதிவுசெய்வதுடன், வைபவம் இடம்பெறும் தினத்தில் பி.ப 1 மணிக்கு வருகைதந்து இதனை உறுதிப்படுத்தவேண்டும் எனவும் மஹாபொல உயர்கல்வி நிதியம் கேட்டுள்ளது. நதீகா அல்லது நுவன் என்பவருடன் 2445037, 2326539 ஆகிய தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொளளமுடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## செய்திக் கட்டுரை - கண்ணன்



கொந்தளிக்கும் அலை நடுவில் தத்தளிக்கும் பயணிகள்

# குமுதினிப் படகு பயணத்தைத் தொடருமா? குமுறும் பயணிகள் குறைகள் தீருமா?

நெடுந்தீவு வாழ் மக்களின் கடற்போக்குவரத்து சேவையின் தன்மை 'கழுதை தேய்ந்து கட்டெறும்பான' கதையாகவே தொடர்கின்றது. இதனை எப்படி மீண்டும் கழுதையாக்குவது என்பதைத்தான் நெடுந்தீவு மக்கள் இப்போது பலமாகவே சிந்தித்து வருகின்றார்கள்.

குமுதினிப்படகு - அதனது சேவைதான் மக்களின் தேவையாக இருந்து வந்தது. ஆனால் அது தனது வழமையான பாணியிலே - மழை, காற்று என்பவற்றால் பழுதடைந்து தற்போது திருத்தங்கள் மேற்கொள்ள விடப்பட்டுள்ளது. அதிலும் ஒரு நகைச்சுவை குமுதினியை கரைக்கு ஏற்றுவதற்கு பனங்குற்றிகள் இல்லையாம். அதுவும் தீவுப்பகுதியில். 'ஆயிரம் பனையுள்ளவனுக்கு பல்லுக்குத்த ஈர்க்கு இல்லை' என்பதுபோல.

தற்போது கேட்டால் குமுதினிப்படகு கொஞ்சம் ஏற்றப்பட்டுள்ளதாம். அது முழுவதுமாக ஏற்றப்படுவதற்கு தரையில் ஏற்றப்பட்ட பாதிப்பகுதியில் ஏதாவது சேதம் வந்துவிடும் என்கிறார்கள்.

இதன் சேவையினை செவ்வனே செய்ய முடியாத வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர் புதிய படகினை எப்படித்தான் பெற நடவடிக்கை எடுப்பார்களோ. தற்போது கடமையில் உள்ளவர்கள் இப்படகின் திருத்தங்களுடனேயே தங்கள் சேவைக்காலத்தை முடித்துவிடுவார்கள். அத்துடன் இப்படகின் பணியாளர்கள் அனைவரும் மாதாந்தச் சம்பளக்காரர்கள். அதனால், படகு ஓடினாலும், ஓடாது கிடந்தாலும் சம்பளம் தான். இன்றைக்கு இவர்கள் ஒரு நாளாந்த சம்பளக்காரர்களாக இருந்திருப்பின் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் முன்னால் மறியல் போராட்டம்கூட நடைபெற்றிருக்கும் என்றால் அதை மறுப்பதற்கில்லை.

அதிகாரசபையில் பணியாற்றும் அதிகாரிகள் தற்போது சேவையில் உள்ள படகில் - காலையில் வந்து மாலையில் திரும்பினால் தெரியும் பயணத்தில் மக்கள் படுகின்ற துயரங்கள் பற்றி. சபையின் உயர் அதிகாரிகள் இதிலே கூடியகவனம் எடுக்கவேண்டும். இது தொடர்பாக மக்கள் மத்தியில் குமுறும் உணர்வுகள் ஒருநாள் மோசமான தாக்கத்தை உண்டு பண்ணவேசெய்யும்.

இன்று பல நோக்குக்கூட்டுறவுச்சங்கப் படகின் சேவைதான் உள்ளது. அதிலே பயணிகள் பொருட்கள் என எல்லாம் ஒன்றாகத்தான் ஏற்றவேண்டும். இது அவசியமானது இதனை யாரும் தடுக்கமுடியாது. எப்படியோ படகில் குந்தியிருக்க ஒரு சிறுஇடம் இருந்தால்போதும என்றே பயணம் தொடங்குகிறது.

அரச நிர்வாகத்தினர் எல்லாம் நெடுந்தீவின் கடற்போக்குவரத்தை கைவிட்டார்களா என எண்ணத் தோன்றுகிறது. யாழ் அரசாங்க அதிபர் ஊடாகக்கூட இதற்கான அழுத்தங்களை கொடுக்கமுடியும். ஆனால், அதற்கான ஏற்பாடுகள் நடைபெறுவதாகக்கூடத் தெரியவில்லை. ஏதோ நெடுந்தீவு பல.நோ.கூ.சங்கம்தான் - நெடுந்தீவுக்கான கடற் போக்குவரத்துச் சேவையினை செய்யவேண்டும் என்பதுபோலக்கருதி, வீதி அபிவிருத்தி அதிகார சபையினரின் சேவையை முக்கியமாக எடுக்க வேணடும் என்பதை மறந்துவிட்டார்கள்போலும்.

இதேவேளை கடந்த வாரம் ப.நோ.கூ. சங்க லொறியிலே பொருட்கள் ஏற்றிவரப்பட்டு, குறிகாட்டுவான் துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இந்தப் பொருட்களை நெடுந்தீவுக்குக் கொண்டுசெல்ல படகுகள் தேவை . ப.நோ.கூ.சங்கத்திடம் உள்ள இருபடகுகளில் ஒன்று பழுதடைந்திருந்தது. மற்றையது பயணிகள் சேவையிலுள்ளது. இந்த வகையில் நெடுந்தீவுக்கான உணவுப் பொருட்களை எடுத்துவருவதில் ஏற்படும் தாமதத்தையும் பெரும் சிரமத்தையும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினருக்குத்தான் சமர்ப்பணமாக்க வேண்டும்.

பல.நோ.கூ.சங்கத்தினரால் பல இலட்சம் ரூபா செலவில் கட்டப்பட்ட புதிய படகுக்கு 40 வருட பழமை வாய்ந்த இயந்திரம் பொருத்தப்பட்டுள்ளது. அதனால் அதன் சேவை அடிக்கடி பாதிக்கப்படுகின்றது. அதற்காக புதிய இயந்திரம் ஒன்றை கொள்வனவு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. இயந்திரத்தின் விலை 20 இலட்சம் ரூபா பெறுமதியானது. ஆனால் இந்த முடிவை எட்டும் அளவுக்கு பல.நோ.கூ.சங்கத்திடம் நிதிவளம் இல்லை. இதனால், அதற்கான நிதிவளத்தைத் தேடும் வழிமுறைகள் இப்போது நடைபெற்று வருகின்றன.

இயந்திரம் கொள்வனவுக்கென ஒரு நிதியத்தினை அமைத்து அதன்மூலம் நலன் விரும்பிகளினூடக நிதிதிரட்ட வாய்ப்புக்கள் உள்ளது. அதற்கு சங்கமும் பொது அமைப்புகளும் முயற்சி எடுக்கலாம்.

தற்போது நெடுந்தீவு மக்கள் அனுபவித்து வருகின்ற வேதனைகளை நாளாந்தம் குமுறுகின்ற கடலன்னை அறிவாள். சீற்றம்கொண்டு குமுறிக்கொண்டு வரும் கடல் அலைகள் படகின் அருகே வந்ததும் சாந்தமாகின்றன. சிறியபடகில் வந்தால்கூட கடலன்னை பக்குவமாய் கொண்டுவந்து கரைசேர்ப்பாள் என்று படகோட்டி ஒருவர் கூறினார்.



அடிக்கடி பழுதடையும் சமுத்திரதேவா படகு

இந்தவகையில், நெடுந்தீவு மக்கள் கடும் காற்றிலும் மழையிலும் வெயிலிலும் திறந்த படகுகளிலும் பயணத்தை பெரும் சிரமப்பட்டு மேற்கொள்ளும் வகையில் வழிசமைத்து, தற்போது கடந்த மூன்று மாதமாக நிரந்தரமாக இயங்காதிருக்கும் குமுதினிப்படகு சேவை மீண்டும் தொடர்வதற்கு அதனைத் திருத்துவதற்கு - முழுமூச்சாக முயலாத, முயற்சி எடுக்காத வீதி அபிவிருத்தி அதிகார சபையினரின் மெத்தனப்போக்கை யாரிடம் சொல்லி அழுவது.

விரைந்து செயற்பட்டு நெடுந்தீவு மக்களின் கடற்போக்குவரத்து சேவையினை தொடர வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் வழிசமைக்க வேண்டும். இத்தனை நாளும் சேவையில்லை என்றும், அதற்கான காரணம் என்ன என்றும்கூட இன்றுவரை இவர்கள் எந்தவித பொது அறிவித்தலும் விடவில்லை. அது எப்போது வருமோ...? படகு எப்போது சேவையைத் தொடருமோ...? ☆

## நாடு எங்கே போகிறது...?



### நாட்டுக்கு ஆபத்தானதும் தேவையற்றதுமான செயற்பாடுகள்

நாம் சில காரியங்களைச் செய்யும் போது 'முகமன' பார்த்துச் செய்வதுண்டு, இப்பிடிச் செய்வதினால் நாங்கள் பல இடர்களைச் சந்திக்கநேரிடும்.

அரசியலிலும் இந்த முகமன் பார்த்து சில காரியங்கள் அரங்கேறியிருக்கின்றன. இது ஆபத்தானதுடன் தேவையற்ற ஒன்று என பத்திரிகைககள் சில கருத்துக்களை வெளியிட்டுள்ளன. இந்த விடயமும் 'முகமன்' பார்த்த விடயம்தான்.

அமெரிக்காவில் இருந்து இலங்கைக் கடற்படைக்கு 'ஹரேஜஸ்' என்ற பாரிய கப்பல் பெறப்படவிருக்கிறது. இந்தக் கப்பலை முதலில் பார்வையிட்டவர்கள் முதலில் கடற்படை அதிகாரிகள் அல்ல. அரசியல்வாதிகள் பார்த்தபின்பு கடற்படை அதிகாரிகள் சென்று பார்வையிட்டு, கடற்படைக்கு தேவையற்ற ஒன்றெனக் கருதிக்கொண்டாலும், அமெரிக்காவின் நல்லெண்ணத்தைப் பெறும் பொருட்டு 'ஓ.கே' பண்ணியுள்ளார்களாம்.

இந்தக் கப்பல் 36 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டது. பழமைவாய்ந்தது. 1967 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18 ஆம் திகதி அமெரிக்க லொரேன் துறைமுகத்தில் கட்டப்பட்டது. பின்பு 1987 ஆம் வேர்ஜினியா நகரத்திலுள்ள பொட்ஸ்மவுத்துறைமுகத்துக்கு திருத்தங்களுக்காகக் கொண்டுவரப்பட்டது. மீண்டும் 1990 ஆம் ஆண்டு பாவனைக்கு விடப்பட்டது. இந்தக் 'ஹரே' கப்பலைத் திருத்தம் செய்வதற்கு 19 தொடக்கம் 21 மில்லியன் டொலர்கள் செலவாகும்.

இவ்வளவு காசை செலவழித்துக் கப்பலை ஓடவிட்டாலும், 18 கடல்மைல் தான் இதன்வேகம். விடுதலைப் புலிகளின் 200 தொடக்கம் 400 குதிரைவலு கொண்ட கப்பலுக்கு இந்தக் கப்பல் எம்மாத்திரம் என்று கொழும்பிலிருந்து வெளிவரும் சிங்களப் பத்திரிகையொன்று அழாக்குறையாகச் செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவுடன் 'முகமன்' பார்த்து நடந்துகொண்ட அரசாங்கம், இந்தியாவை விட்டுவைத்ததா?

சில வருடங்களுக்கு முன்பு உகண்டாவில் உள்ள 'என்டபே' என்ற விமான நிலையத்தை கட்டியவர்கள் இஸ்ரவேலர்கள்தான். இஸ்ரவேலினால் மேற்கொள்ளப்பட்டு, வெற்றிகரமாக முடிக்கப்பட்ட 'என்டபே நடவடிக்கை' என்ற தாக்குதல், முன்பு கட்டடம் கட்ட வந்தவர்களினால் முன்வைக்கப்பட்ட திட்டத்தினால் நிறைவேற்றப்பட்டதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றார்கள்.

அப்படி இலங்கையில் நடந்திடுமோ என்று தென் இலங்கை பத்திரிகை ஒன்று கருத்து வெளியிட்டுள்ளது. பலாலி விமான நிலையத்தைத் திருத்தம் மேற்கொள்வதற்காக இந்திய அரசாங்கம் முன்வந்துள்ளது. பலாலி யுத்தத்தின் கேந்திரஸ்தானம். இதைத் திருத்தம் செய்வதற்கு இலங்கை விமானப் படையில் பொறியியலாளர்கள் இல்லையா என அந்தப் பத்திரிகை வினா எழுப்பியுள்ளது.

அண்மையில் இலங்கை வந்திருந்த இந்தியக் கடற்படை அதிகாரி அட்மிரல் தாஸ் வடக்கில் இருந்து கிழக்கு வரையுள்ள கடற்பிரதேசத்தில் இலங்கைக் கடற்படைப் பாதுகாப்பை மேற்கொள்ள முடியாதுவிட்டால், இந்தியா கடற்படையினர் இதன் பாதுகாப்பை மேற்கொள்ளலாம் என்றும் இதனால், பாதுகாப்பை மேற்கொள்ளும் சிறிய ஹெலிகொபர்களுக்கு இலங்கை விமான நிலையத்தில் எரிபொருள் பெற்றுக் கொள்ளும் வசதிகள் செய்யப்படலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

இது இலங்கைக்குச் சார்பாக அமைந்துவிடாது. இது இந்தியாவை இலங்கையின் நடவடிக்கைகளுக்கு ஈடுபடுத்தும் கைங்கரியம் என்றும் அந்தப் பத்திரகை வெளியிட்டுள்ளது.

- மகரம்

# வணிகத்துறைக்கு கூடுதலான மாணவர்களை அனுமதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்!

## மாணவர் ஒன்றியம் கோரிக்கை

மாணவர் நன்மை கருதியும் வணிகத்துறையின் வளப்பயன்பாட்டைக் கருத்திற்கொண்டும், வணிகத்துறைக்கு மேலதிக மாணவர்களை அனுமதிப்பதற்கு சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்புகொண்டு ஆவன செய்யுமாறு முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட மாணவர் ஒன்றியத்தினர் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடத்திற்கான அனுமதியில் வணிகத்துறையில் இந்த முறை 10 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளனர். கடந்த காலங்களில் வணிகத்துறைக்கு அனுமதி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது இந்தமுறை - மாணவர் அனுமதியில் தமிழ் மாவட்டங்களில் பாரியளவு வீழ்ச்சி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் யாழ் மாவட்டத்திலிருந்து 55 வீதம் கோட்டா அடிப்படையிலான தெரிவில் ஆகக்குறைந்தது 23 மாணவர்கள் (93/94 கல்வி ஆண்டு அடிப்படை) தெரிவுசெய்திருக்கப்பட்டிருக்க வேண்டிய நிலையில் ஏறக்குறைய 6 மாணவர்களே தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

எமது பல்கலைக்கழகத்தில் வணிகத்துறையானது சுமார் 150 மாணவர்களிற்கு கல்வி கற்பிப்பதற்கான வசதிகளை கொண்டிருந்த போதிலும் 10 மாணவர்கள் மட்டுமே அனுமதி பெற்றுள்ளனர் என்பது மிகவும் ஒரு நகைபபிற்கிடமான விடயமாக அமைந்துள்ளது. பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் வழங்கப்படும் மாணவர் அனுமதிக்கான முதற்படிவத்திலும் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மீள்குடியேற்றம் தொடர்பான முக்கிய கலந்துரையாடல்

(நாவற்குழி)

மறவன்புலோ, தனங்கிளப்பு, நாவற்குழி, கைதடிப் பிரதேச மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்கான முக்கிய கூட்டமொன்று இன்று நடைபெறவுள்ளது.

நாவற்குழி பாரதி சனசமூக நிலையத்தினர் மீள்குடியேற்றம் தொடர்பாக பிரதமர் ரணிலுக்கு கடந்த மாதம் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தனர்.

இந்தக் கடிதத்துக்கான பதிலாக வரணிப் படைத்தள அதிகாரி இந்தப் பகுதி மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

கோகிலாக்கண்டி மகாலட்சுமி வித்தியாலயத்தில் காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் மேற்படி பிரதேசத்தைச் சேர்ந்த பொதுமக்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு பாரதி சனசமூக நிலையத்தினர் கேட்டுள்ளனர்.

(ச)

# பங்களாதேஷில் பள்ளிவாசலின் மீது குண்டுத்தாக்குதல் - 3 பொதுமக்கள் பலி



பங்களாதேஷில் சில்கெற் நகரில் நேற்றுமுன்தினம் முஸ்லிம்களின் பள்ளிவாசல் ஒன்றின்மீது நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதலில் மூவர் கொல்லப்பட்டது தொடர்பாக 24 பொதுமக்கள் சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் 30 பேர்வரை காயமடைந்துள்ளனர். கொல்லப்பட்டவர்களில் 14 வயது சிறுவனும், அடையாளம் தெரியாத வேறொருவரும் அடங்குவதாகவும், மேலும் ஒருவர் வைத்தியசாலையில் மரணமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

முஸ்லிம்களின் உர்ஷ் சரீப் எனப்படும் 3 நாள் கொண்டாட்டத்தின்போது 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் கூடியநேரத்தில் இந்தக் குண்டுவெடிப்பு நடைபெற்றுள்ளது. 700 ஆண்டுகள் பழையவாய்ந்த மசூதியில் முதன் முறையாக நடைபெற்ற குண்டு வெடிப்பு இது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# நோயாளியைக் கொன்ற வைத்தியர் சிறையில் சுருக்கிட்டுத் தற்கொலை!



கரோல்ட் சிப்மன் இங்கிலாந்தில் மான்செஷ்டர் நகரில் குடும்ப வைத்தியராகத் தொழில் புரிந்து வந்தவர். இவர் இரண்டாயிரமாம் ஆண்டு 15 நோயாளிகளை கொலை செய்தார் எனவும், அவர்களது சொத்துக்களைத் தன் பெயரில் கொல்லப்படுவதற்கு முன்னர் எழுதுவித்தார் எனவும் குற்றம்சுமத்தப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டிருந்தார். விசாரணையின் போது 215 நோயாளிகளை கொலைசெய்ததாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனால் இவர் 19 ஆண்டுகள் வேக்பீல்ட சிறைச்சாலையில் ஆயுட் கைதியாக சிறைவாசம் அனுபவிக்க நேர்ந்தது. தற்போது இவர் படுக்கை விரிப்பை உபயோகித்து சிறையில் தற்கொலை செய்துகொண்டதாக சிறைச்சாலைப் பேச்சாளர் தெரிவித்தார்.

57 வயதுடைய சிப்மன் இங்கிலாந்தின் சரித்திரத்தில் மிகக் கூடுதலானவர்களைக் கொலைசெய்துள்ளார். ஆனால், எப்போதும் தான் கொலையாளி அல்ல என வாதிட்டும் வந்துள்ளார். மேலும், தனது கொலைகளுக்காக வருத்தம் தெரிவிக்கவில்லை. மேலும் இவரால் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 215 ஆக கருதப்பட்டுள்ளது. இவர்களில் 171 பேர் பெண்களாவர். கொல்லப்பட்டவர்கள் 93 வயதிலிருந்து 47 வயதுக்கு இடைப்பட்டவர்களாகக் காணப்படுகின்றனர். நஞ்சு கலந்த ஹரோயின் போதை வஸ்து ஊசியை ஏற்றியே இவர் கொலைகளைச் செய்துள்ளார்.

# ஈராக்மீதான போரைக் கண்டித்து அமெரிக்க பேராசிரியர் விமர்சனம்



அமெரிக்க அரசின் போர்ப்பயிற்சிப் பாடசாலையொன்றில் கடமையாற்றும் பேராசிரியர் ஜெப்ரே ரெக்கோட் அமெரிக்காவின் - ஈராக் மீதான போரை விமர்சித்துக் கருத்து வெளியிட்டுள்ளார்.

மேலும் புஷ் நிர்வாகத்தின் பயங்கரவாதத்திற்கெதிரான போர் எதிர்பார்க்கப்படும் பலனைத் தரமாட்டாதெனவும் தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கை புஷ் நிர்வாகத்தினருக்கு மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுத்துள்ளதாக பி.பி.ஸி யின் நிருபர் நிக்ஷி சொல்ட் தெரிவித்தார்.

மேலும் அல்கொய்தா அமைப்பைத் தோற்கடிக்கலாம். ஆனால், சர்வதேச பயங்கரவாதத்தை முற்றாக நீக்கமுடியாதெனவும் தெரிவித்திருக்கிறார்.

இதனிடையே மேற்குறிப்பிடப்பட்ட கருத்துக்கள் தனிமனிதனுடைய கருத்தெனவும், அமெரிக்கக் கொள்கைக்கு முரணானதெனவும் அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உலக நோக்கு

ராஜா யாழ்ப்பாணம்.
இன்று மட்டும்
ராஜ்கிரண், ஸ்ரீ, கருணாஸ்
நடித்த
கொஞ்சிப் பேசலாம்
காட்சிநேரம் :
10.30, 2.30, 6.30 (பு.நே)
நாளைமுதல்
பொங்கல் வெளியீடு - பிரசாந்தின்
ஜெய்
(சி-2005)

நிறைஞ்சனாஸ் சங்கானை
விஜய், ஜோதிகா நடித்த
குஷி
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
KEOMA
(சி-2004)

அச்சகம் = திறப்புவிழா அழைப்பிதழ்
இன்றுமாலை 5 மணியளவில் எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள
J
J M J அச்சகம் திறப்பு விழாவில்
J
❑ உறவினர் - நண்பர்கள் - அன்பர்கள்
மற்றும் வாடிக்கையாளர்கள்
அனைவரையும் கலந்துகொண்டு
சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம் ❑
◆ இதையே நேரடி அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும் ◆
■ உங்களின் சகல அச்சுவேலைகள் - கணினி அச்சுவேலைகள்
இறப்பர் முத்திரைகள் - பைண்டிங்வேலைகள்
பிளாஸ்டிக் எழுத்து வேலைகள் அனைத்திற்கும்
JMJ அச்சகம்
இல. 2, ஈச்சமோட்டை,
கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.
உரிமையாளர்,
வி.அ.திருநாயகம்.
(சி-2135)

முழங்காவில் பிரதேசத்தில்
14 சனவரி 2004 முதல்
உங்கள் அருகில் உங்கள் தெரிவில்
உங்களுக்காகவே
வைப்பு வசதிகள்
❖தேட்ட வைப்புக்கள்
❖நிலையான வைப்புக்கள்
கடன் வசதிகள்
❖தங்க அடைவுக் கடன் சேவை
❖ஏனைய கடன் வசதிகள்
❖மேலும் பலவகை வைப்பகப்பணிகள்
உங்கள் நம்பிக்கையின் சின்னம்
தமிழீழ வைப்பகம்
வாருங்கள் உங்கள் வளமான வாழ்வுக்கு வழிகாட்டுகின்றோம்
தமிழீழ வைப்பகம்
தமிழரின் காப்பகம்
(சி-2123)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# அமெரிக்க அப்பாச்சே ஹெலி ஈராக்கில் சுட்டுவீழ்த்தப்பட்டது

## இரண்டு வாரங்களில் மூன்றாவது சம்பவம்

(பாக்தாத்)

அமெரிக்க இராணுவத்தின் முதன்மை தாக்குதல் ஹெலிகொப்ரர் ஒன்று பலுஜாவுக்கு அண்மையில் சுட்டு வீழ்த்தப்பட்டது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது-

பாக்தாத்துக்கு மேற்கே 48 மைல் தொலைவிலும், பலூஜா நகரிலிருந்து 12 மைல் தொலைவிலும் உள்ள ஹபானியா என்ற நகரப்பகுதியிலே நேற்றுக் காலை அமெரிக்க இராணுவ ஹெலி சுட்டுவீழ்த்தப்பட்டது.

அமெரிக்க இராணுவத்தின் முதன்மையான, தாக்குதல் ஹெலிகொப்ரர் ரகமான 'அப்பாச்சே' ஹெலியே சுட்டுவீழ்த்தப்பட்டது. இதிலிருந்து இரண்டு விமானிகளும் உதவித் துருப்புக்களால் காப்பாற்றப்பட்டதாக, அமெரிக்க இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஈராக் நேரப்படி காலை 10 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் குறித்து, தகவலை உறுதிப்படுத்திய அமெரிக்க இராணுவத்தின் பேச்சாளரான, கேணல் வில்லியம் டார்லி நிலத்திலிருந்து நடத்தப்பட்ட தாக்குதலை அடுத்தே, அபாச்சே ஏ.எச்.64 ரக ஹெலி வீழ்ந்து நொருங்கியதாகக் குறிப்பிட்டார்.

கடந்த இரண்டு வாரங்களில் பாலூஜா நகரப்பகுதியில் வைத்து சுட்டுவீழ்த்தப்பட்ட மூன்றாவது அமெரிக்க ஹெலி இதுவாகும். ஏற்கனவே பிளக்ஹோக் மற்றும், ஏ.எச்.டெல்ராகியோவா ரக ஹெலிகள் இந்த வருடத்தில் மாத்திரம் சுட்டுவீழ்த்தப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது.



# பத்திரிகைத்துறையில் அரைநூற்றாண்டு

## நூல்வெளியீட்டு விழா நாளை நடைபெறும்

மூத்த பத்திரிகையாளர் எஸ்.எம். கோபாலரட்ணம் எழுதிய "பத்திரிகைப்பணியில் அரைநூற்றாண்டு" நூல்வெளியீட்டு விழா நாளை பி.ப 4 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நமது ஈழநாட்டின் நிர்வாக இயக்குநர் சி.சிவமகாராஜா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வரவேற்புரையை பூநகுலன் நிகழ்த்துவார்.

ஆசியுரையை மூதறிஞர் வரதராசன் நிகழ்த்துவார். பேராசிரியர் அ.சண்முகதாஸ், கலாநிதி க.சொக்கலிங்கம் பேராசிரியர் சிவச்சந்திரன், புலவர் ம.பார்வதிசிவம் ஆகியோர் நிகழ்த்துவர்.

வெளியீட்டு உரையை உதயன் பத்திரிகையின் ஆசிரியர் எம்.வி. கானமயில்நாதனும், நூலுக்கான ஆய்வுரையை கலாநிதி க.குணராஜாவும் நிகழ்த்தவுள்ளனர். நூலின் முதல் பிரதியை நா.ஸ்ரீரங்கநாதன் பெற்றுக்கொள்வார்.

இந்த நிகழ்வில் தைபிறந்தது தமிழருக்கு வழி பிறக்குமா எனும் தலைப்பில் சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தா உரையாற்றவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ச)

### பிரஜாவுரிமை ஆவணங்களை...

ஜனாதிபதி மாளிகையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றிலேயே அவர் இந்த உத்தரவை பிறப்பித்தார்.

இந்திய வம்சாவளியினருக்கு பிரஜாவுரிமையைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் எந்த அரசியல் கட்சிகளும் இலாபம் ஈட்டிக்கொள்வதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

இந்த நடவடிக்கையை மாவட்ட செயலர்கள் ஊடாக பிரதேச செயலர், கிராமசேவகர் ஊடாக நடைமுறைப்படுத்துமாறும் ஜனாதிபதி கேட்டுள்ளார்.

### சமாதானப் பேச்சை...

ஏற்படுத்திக் கொடுப்பதற்கான திட்டங்கள் குறித்து சுவீடன் அரசு முன்னெடுத்து செல்லவுள்ளது.

நீண்ட காலமாக இலங்கையில் நடைபெற்றுவரும் யுத்தத்திற்கு தீர்வு கான சுவீடன் அரசு அக்கறையுடன் உள்ளது. இதற்காகவே எமதுநாடு பத்துக்கு மேற்பட்ட போர்நிறுத்த கண்காணிப் பாளர்களை இங்கு அனுப்பி வைத்துள்ளது எனவும் தெரிவித்தார்.

### இந்தியா-இலங்கை...

பான விடயங்களை ஆராயவே விசேட குழுவொன்றை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் தலைமையில் புதுடெல்கிக்கு அனுப்ப ஜனாதிபதி சந்திரிகா முடிவுசெய்துள்ளார்.

இந்த விசேட குழுவில் இராணுவத் தளபதியும் கூட்டு நடவடிக்கைத் தளபதியுமான லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல மற்றும் சட்டமா அலுவலகத்தைச் சேர்ந்த நிபுணர்களும் இடம்பெறவுள்ளனர்.

கடந்த டிசெம்பர் மாதம் இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்த இராணுவத் தளபதி லெப் ஜெனரல் லயனல் பலகல்ல, இந்திய அதிகாரிகளுடன் பாதுகாப்பு உடன்படிக்கை தொடர்பாக கலந்துரையாடியிருந்தார்.

இந்தப் பாதுகாப்பு உடன்படிக்கையில் புலனாய்வுத் தகவல்களை பரிமாற்றம் செய்தல், கரையோரப் பாதுகாப்பு, இலங்கைப் படையினருக்கான பயிற்சிகளை வழங்கல், இராணுவத் தளபாடங்களை விநியோகித்தல், இலங்கைப் படையினருக்கு போககுவரத்து உதவிகளை வழங்குதல், மற்றும் கூட்டு இராணுவ ஒத்திகைகளை மேற்கொள்ளுதல், ஆகிய விடயங்களை உள்ளடக்கியிருப்பதாக இந்திய செய்தி ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இந்தப் பாதுகாப்பு உடன்படிக்கைகளை விரைவாகச் செய்துகொள்வதற்கும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூடிய கவனம் செலுத்தி வருவதாகவும், இவ்வாறு அவசரப்படுவதற்குரிய காரணம் என்ன என்றும் கொழும்புச் செய்தி வட்டாரங்கள் கேள்வி எழுப்பியுள்ளன.

# பொங்கு தமிழுக்கான பிரசாரப்பணி ஆரம்பம்

கிழக்கு பல்கலைக்கழக மாணவர் சமூகத்தினரால் எதிர்வரும் 21 ஆம் திகதி பல்கலைக்கழக முன்றலில் நடைபெற ஏற்பாடாகியுள்ள பொங்கு தமிழ் நிகழ்வுக்கான பிரசாரப் பணிகள் ஆரம்பமாகியுள்ளன.

பொங்கு தமிழ் செயற்பாடுகள் தொடர்பாக மக்கள் மத்தியில் இருக்கும் சந்தேகங்களை நீக்கி, அவர்களை இந்த நிகழ்வில் இணைத்துக் கொள்வதே இந்தப் பிரசாரப் பணியின் நோக்கமாகும்.

இதன்படி, நேற்றுமுன்தினம் மட்டக்களப்பின் வாழைச்சேனை மற்றும் பிற இடங்களில் இந்தப் பணி நடைபெற்றது. இதில் பெருமளவான பல்கலைக்கழக மாணவர்கள் - மக்களின் வீடுகளுக்குச் சென்று பொங்கு தமிழ் தொடர்பான விளக்கத்தை அளித்தனர்.

நேற்று அம்பாறை மாவட்டத்[illegible]குச் சென்ற இவர்கள், அங்கு க[illegible]முனை, காரைதீவு பிரதேசங்களில் இந்த பொங்கு தமிழ் தொடர்பான விளக்கங்களை அளித்தனர். இன்றும் இந்த மாதிரியான விளக்கங்கள் அங்கு நடைபெறுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (07)

# மக்களுக்கு இடையூறாக...

யில் நின்றிருந்த வேளையில் பொது மக்கள் சிலரால் வழங்கப்பட்ட தகவலையடுத்தே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட எண்மரும் நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதிமன்றில் பொலிஸாரால் ஆயர் செய்யப்பட்டிருந்தனர். இவர்கள் அனைவரையும் எதிர் வரும் 20 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கும்படி நீதவன் க.அரியநாகம் சிறைச்சாலை அதிகாரிக்கு உத்தரவிட்டார்.

இதேவேளை கைது செய்யப்பட்ட கும்பல் மீது ஏற்கனவே பல முறைப்பாடுகள் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும்பொலிஸ் தரப்பு செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. (202)

# போதைப்பொருள் வைத்திருந்தவர் வவுனியாப் பொலிஸாரால் கைது!

வவுனியா மாவட்ட கற்குழி பிரதேசத்தில் போதைப்பொருள் வைத்திருந்த ஒருவர், பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

8 மில்லிகிராம் பைக்கற்றுக்களாக சுமார் 28 பைகளை இவர் வைத்திருந்தபோதே பொலிஸாரால் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டார்.

இவரை பொலிஸார் நீதிமன்றில் ஆஜர்செய்தபோது எதிர்வரும் 19ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (03)

# தேசப்பற்று முன்னணி நடத்திய...

தேசப்பற்று தேசிய முன்னணி தலைவர் எல்லே குணாவன்ச தேரர் ஆகியோர் கலந்துகொண்டார்கள். நூற்றுக்கு மேற்பட்ட பஸ்களில் சிங்கள பெரும்பான்மையினர் கொண்டுவரப்பட்டனர். இந்தக் கூட்டத்தில் சுமார் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

இங்கு மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச கருத்துத் தெரிவிக்கையில் -

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற சமாதானப் பேச்சுவார்த்தை-விடுதலைப் புலிகளின் யுத்த தந்திர நடவடிக்கைகளுக்கு வலுவூட்டுவதாகவே அமைகின்றது. தமிழர் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் சாரதிகளாக இருப்போர் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளாகவும் கையாட்களாகவும் உள்ளனர்.

இலங்கை அரசிற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே செய்துகொள்ளப்பட்ட சமாதான உடன்படிக்கையினால், கிழக்குவாழ் முஸ்லிம்களுக்கு பெரும் அச்சுறுத்தலாகவுள்ளது. இந்த ஒப்பந்தத்தின் விளைவாக தமிழ்க் குழுக்களுக்கு மரண அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

சமாதான உடன்படிக்கை தமிழ் மக்களுக்கும், சிங்கள மக்களுக்குமிடையே வெறுப்பு தன்மையை ஏற்படுத்துகின்றது. இந்தியாவின் அரசியலைத் தீர்மானிக்கும் சக்தியாகவும் விடுதலைப் புலிகள் விளங்குகின்றார்கள். இவற்றைவிட தமிழீழ விடுதலைப் புலிகளை பயங்கரவாதப் பட்டியிலிலிருந்து நீக்குமாறு கோரிக்கை விடுவதில் விடுதலைப் புலிகளைக் காட்டிலும் அரசாங்கமே அதிக அக்கறை காட்டிவருகின்றது. அந்த வகையில் திமகேஸ்வரன் குறிட்பிடத்தக்கவர். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பி.க்குமிடையிலான கூட்டணி அமைப்பதற்கான ஒபபந்தம் இம் மாதம் 31 ஆம் திகதிக்கு முன் இடம் பெறும் எனவும் தெரிவித்தார். (4,10)

### அஷ்ரப்...

ரவூப் ஹக்கீம்தான் கதிர்காமர் என்ற விடுதலைப்புலி உறுப்பினர் ஒருவரை ஹெலியில் அனுப்பிவைத்து அஷ்ரப்பை கொலை செய்தார். எனவே அஷ்ரப் கொலைக்கு அமைச்சர் ரவூப் ஹக்கீமே காரணமென்று அவர் கூறினார்.

### சுதந்திரக்கட்சி...

கொண்டனர். நேற்று முன்தினம் மாலை 5 மணிமுதல் இரவு 8.00 மணிவரை நடந்த நீண்ட பேச்சுக்களை அடுத்தே இரு கட்சிகளுக்கும் இடையிலான உடன்படிக்கையில் இறுதி முடிவு எடுக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பின் போது பொதுத் தேர்தலில் இரண்டு கட்சிகளும் இணைந்து போட்டியிடுவது என்றும், மாகாணசபைத் தேர்தலில் தனித் தனியே போட்டியிடுவது என்றும் இரு கட்சிகளினதும் தலைவர்களும் இணங்கியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, சுதந்திரக் கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் இடையிலான கூட்டணி உடன்படிக்கை செய்துகொள்ளும் நிகழ்வை பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடத்த இருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பண்டிகைக் கால விசேட சலுகை

எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது தைப்பொங்கல் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதுடன் வெளிநாட்டில் உள்ள உங்கள் உறவுகளுடன் பேசி மகிழ விசேட சலுகை.

ஒரு நிமிடத்திற்கு கட்டணம் 5/=

இச்சலுகை 14.01.2004 தொடக்கம் 16.01.2004 வரை மட்டுமே

ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்

303, கே.கே.எஸ் றோட்,
யாழ்ப்பாணம்
T.P: 021 222 2670
Fax:021 222 3214.
E.Mail: del-smskr@eureka .lk

## மஹஜன சம்பத பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல: 1581 திகதி: 13.01.2004

வெற்றி இலக்கங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| T | 5 | 1 | 7 | 9 | 6 | 9 |

## பொங்கலுக்குப்பின் நூல்வெளியீடு

பொங்கல் பொங்கி சூரியனுக்குப் படையல் செய்து சுற்றம் சூழ உண்டு மகிழ்ந்தபின் -

உண்டமயக்கத்தில் கொட்டாவி விட்டபடி தொலைக்காட்சிப்பெட்டி முன் உட்கார்ந்து பொழுதை வீணாக்குவதா?

நாளை பிற்பகல் 4 மணிக்கு யாழ் நகரில் நாவலர் வீதியில் நாவலர் கலாசார மண்டபத்தில் கோபுவின் "**பத்திரிகைப்பணியில் அரை நூற்றாண்டு**" என்ற அனுபவ நூல்வெளியிடப்பெறுகிறது.

மூதறிஞர் **தி.ச.வரதர்**, மூதறிஞர் **க.சொக்கலிங்கம் (சொக்கன்)** பேராசிரியர் **சிவச்சந்திரன்**, பேராசிரியர் **அ.சண்முகதாஸ்**, உதயன் பிரதம ஆசிரியர் **எம்.வி.கானமயில்நாதன்**, கலாநிதி **க.குணராசா (செங்கை ஆழியான்)** புலவர் **ம.பார்வதிநாதசிவம்** வாழ்த்துகிறார்கள் - உரையாற்றுகிறார்கள்.

"**தைபிறந்து தமிழருக்கு வழிபிறக்குமா?**" என்றுகேட்டு **திரு.என்.சிறிக்காந்தா** சிறப்புரையில் முழங்கப் போகிறார்.

**அனைவரும் வருக!**

**நூல்வெளியீட்டுக்குழு**

## திருமறைக்கலா மன்றம் நடாத்தும் பொங்கல் விழா - 2004

காலம்:- நாளை 15.01.2004 வியாழக்கிழமை

இடம்:- திருமறைக்கலாமன்ற அரங்கு

**காலையில்**

06.00 மணி - பொங்கல் வைபவம்

07.30 மணி - பண்பாட்டு வழிபாடு.

**மாலையில்**

06.45 மணி

**கலை நிகழ்ச்சிகள்**

பல்வகை நடனங்கள், கிராமியப் பாடல்கள்,
கவியரங்கம், நாடகம்.

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**திருமறைக் கலாமன்றம்,**
**238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.** (சி-2133)

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 14.01.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.